அருந்துங்கள்!
'அண்ணா கோப்பி'
பாலிந்த வெற்றுப் பைகளைக் கொடுத்து இனாம் பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா தொழிலகம்
இணுவில்
[இ-9106]

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கட் விலை 50/-
நான்கு மாதக் குழந்தைகளிலிருந்து கொடுக்கக் கூடியது
அண்ணா தொழிலகம்
இணுவில்
[இ-9106]

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 09 ஞாயிற்றுக்கிழமை (25 - 09 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 302

பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் வரை அரசாங்கம் போர் நிறுத்தம் செய்யாது

அமைச்சர் அனுருத்த தகவல்

கொழும்பு, செப்ரெம்பர் 25

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் வரை, அரசு போர் நிறுத்தம் செய்யாது.

பேச்சுவார்த்தை மூலமாக மட்டுமே போர் நிறுத்தம் சம்பந்தமாக முடிவுக்கு வரமுடியும்.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், மின்சக்தி, எரிபொருள், நீர்ப்பாசன அமைச்சருமான அனுருத்த ரத்வத்த இவ்வாறு விளக்கியுள்ளார்; தெளிவுபடுத்தி உள்ளார்.

செய்தி ஏஜென்சி ஒன்றின் முகவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் அனுருத்த இவ்வாறு கூறியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன:

அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அமைச்சர் பின்வருமாறு விளக்கினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் வரை எவ்வகையிலும் போர் நிறுத்தம் செய்யப்படமாட்டாது. இதுவே அரசின் இப்போதைய நிலைப்பாடாகும்.

பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் வரை போர் நிறுத்தம் குறித்து முடிவெடுப்பது அரசின் பொறுப்பல்ல. பேச்சுவார்த்தையின் மூலமாக மட்டுமே போர் நிறுத்தம் சம்பந்தமான முடிவுக்கு வருதல் வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும் — என்று அவர் கூறினார் என்று அறிவிக்கப்பட்டது.

(அ-2-6)

மட்டக்களப்பில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, செப். 25

மன்னார் கடலில் கடற்படைக் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அங்குள்ள சோதனை நிலையங்களில் காணப்பட்ட தெரிந்த நிலை இறுக்கமடைந்து தீவிரமாகியுள்ளதாகவும்—

இரவு நேரங்களில் ஆயுதம் ஏந்திய பொலீஸார் முக்கிய சந்திகளில் பாதுகாப்பில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

புலிகளின் தாக்குதல் கவலை தருகிறதாம்

ஐ.தே.க. அறிக்கை

கொழும்பு, செப். 25

"புதிய அரசு புதிய அணுகுமுறையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இறந்த மனிதனுடன் செய்யப்பட்டு வருகிறது; இவ்வேளையில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டு சவால் விடுக்க முற்படுவது மென்மேலும் கவலையைத் தருவதாகும்."

—இவ்வாறு ஐ. தே. க பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (உ-6)

10 ஆவது நாளாக நேற்று மக்கள் திரண்டு அஞ்சலி

நாளை இறுதி நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டிய நிகழ்வுகள் குடாநாடெங்கும் நேற்று 10 ஆவது நாளாகத் தொடர்ந்து உணர்ச்சிபூர்வமாக நடைபெற்றன.

ஆட்டோ வாகனங்கள், பறவைக் காவடிகள் என்பன நேற்றும் பல இடங்களில் நடைபெற்றன. கோட்டைவடிவான வாரிப் பவனியும் இடம்பெற்றது.

சங்கானை வட்டப் பகுதியில் இருந்து புறப்பட்ட பறவைக்காவடி நல்லூரில் உண்ணாவிரதம் நடைபெறும் பந்தலுக்கு வந்து சேர்ந்தது.

நிவகப்பகுதி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பறவைக் காவடி மற்றும் ஆட்டக் காவடிகள் யாழ். பல்கலைக்கழகப் பகுதியில் இருந்து புறப்பட்டன. வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலும் நினைவு நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நல்லூரில் நேற்று நடந்த உண்ணாவிரத நிழற்பந்தலில் யாழ். கல்வி அமைச்சுத்தரைச் சேர்ந்தவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், தென்னை பனை அபிவிருத்திச் சங்கங்களைச் சார்ந்தோர், சுழிபுரம் கிராம மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

மாலிப்பாயைச் சேர்ந்த இரத்தினசிங்கம் அமரநீதிராஜ லிங்வி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த சனாதனி நந்தகுமார் ஆகிய இருவரும் நேற்று முதல் நாளை நிகழ்வு வரை மூன்று நாள் தவர்கள் மற்றும் பாடசாலை

[6 ஆம் பக்கம் பார்க்க]

கூட்டுறவுச் சங்கங்களுக்கு கப்பல் கட்டணமின்றி பொருள்

சந்திரிகாவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களான உணவுப்பொருள்களை கப்பல் கட்டணம் இன்றி அனுப்பு மாறுயாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் ஸ்ரீலங்கா பிரதமருக்கு கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருளாதாரத் தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளபோதும் பொருள்களின் குறிப்பிடத்தக்க விலை மாற்றத்தை எதிர்பார்க்க முடியாமல் உள்ளது.

வடபகுதிக்கான தரை மார்க்கமான சீரான பாதை ஒன்று அமையும் வரை கப்பல் மூலமே பொருள்களைக் கொண்டுசேர வேண்டியுள்ளது கப்பலுக்கான கட்டணம் கூடுதலாக உள்ளதும் —

மற்றும் ஏற்றுக்கூலி நாமதம் ஆகியவையும் பொருள்களின் விலை உயர்விற்கான காரணிகளாக அமைகின்றன

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-4]

ஆவணம் எதுவுமின்றி புனர்வாழ்வு அமைச்சு ரூ. 520 கோடி செலவு

விசாரணை செய்ய ஆணைக் குழு

கொழும்பு, செப். 25

1988 ஆம் ஆண்டு தொடக்கம் 5 வருட காலப்பகுதியில் எந்தவித ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆவணங்களும் இல்லாமல் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சினால் செலவிடப்பட்ட 520 கோடி ரூபா செலவினம் குறித்து விசாரணை செய்யவென விசேட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமான திட்டம் பற்றி ஆராயவென இந்த மாநாடு நடைபெற்றது.

அந்த அமைச்சர் அஷ்ரப் வெளியிட்ட மேலதிக தகவல்கள் வருமாறு:-

★ அடுத்த 3 மாத காலத்தில் அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்கும் புனர்வாழ்வுக்கும் என 25 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நாட்டின் முக்கோணப் மீளக்குடியமர்வு மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது: அந்த மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களில் முன்னூறாயிரத்து 500க்கும் அதிகமான குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன

★ அகதிகள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக — ஒரு பகுதியாக — மீளக்குடியமர்த்தும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

★ திருகோணமலையைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

★ நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு [illegible]

(7 ஆம் பக்கம் பார்க்க)

மூன்கூட்டியே தகவல் கிடைத்திருந்ததாம்

கெமுனு குலதுங்க கூறுகிறார்

கடற்படைக் கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளினால் தாக்கப்படவுள்ளது என்று முன்கூட்டியே இராணுவத்துக்கு தகவல் கிடைத்திருந்தது இது குறித்து கடற்படைக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க முன்கண்டவாறு தெரிவித்தார். (இ-எ)

அகதிகளை இறக்கிவிட்டு பொதிகளுடன் சென்றகப்பல்

யாழ்ப்பாணம், செப். 25

தமிழகத்திலிருந்து 'நிக்கோபார்' கப்பலில் திருகோணமலைக்கு வந்த அகதிகள் பலரின் பொதிகள் மீண்டும் அதே கப்பலில் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

அகதிகள் துறங்கிய பின்னர் கப்பலில் இருந்த பொதிகள் இறக்கும் வேலைகள் நடைபெற்ற சமயம், பொதிகள் முழுவதும் இறக்கி முடியாத நிலையில் கப்பல் புறப்பட்டுச் சென்றது.

பாதுகாப்புக் காரணம் கருதி மாலை 6.00 மணிக்கு முன்னர் இலங்கை கடல் எல்லையை கப்பல் கடந்து செல்ல வேண்டியிருந்ததாலேயே பொதிகள் முழுவதும் இறக்கப்படாத நிலையில் கப்பல் புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் கப்பல் திருகோணமலைக்கு வரும்போது பொதிகள் பத்திரமாக எடுத்து வரப்படும் என்று கப்பல் அதிகாரிகள் அகதிகளுக்கு அறிவித்துள்ளனராம். (இ-4)

கற்றிட்டிச் சர்பவர்:

செஞ்சிலுவைச் சங்கம் விவரம் அறிய முயற்சி

கொழும்பு, செப். 25

மன்னார் கறிபிட்டி கடற்பகுதியில் கடற்படைக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டிருக்கக்கூடிய கடற்படையினர் மற்றும் வலியான கடற்படையினரின் சடலங்கள் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்காக மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகள் இயக்க முக்கியஸ்தர்களுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாக கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவரங்கள் கிடைத்ததும் அதுபற்றிய கடற்படைத் தலைமைக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

விஜேவீராவின் மைத்துனர் டி.பியை சந்திக்கிறார்!

கொழும்பு, செப். 25

காணாமல்போன ஜே.வி.பி இயக்கத் தலைவர் ரோஹண விஜேவீராவின் மைத்துனரான டாக்டர் சந்திரா பெரேராவுடோ செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்திக்கவுள்ளார்.

கடந்த காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஜே.வி.பி.யின் உடைமைகளை மீண்டும் பெற்றுக் கொள்வது, திருமலை கடற்படை முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள தனது தங்கையான திருமதி ரோஹண விஜேவீரவை விடுதலை செய்யக் [illegible] ஜனாதிபதியுடன் பேசவுள்ளார்.

[illegible] திரு. விக்டர் ஐவன் இத்தகவலைத் தெரிவித்தார். (இ-ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

ரூபா 8 கோடி செலவில் ஆரம்ப அபிவிருத்தி வேலை

சந்திரிகாவிடம் திட்டம் கையளிப்பு

கொழும்பு, செப். 25

யுத்தத்தினால் எழிலுற்றுள்ள யாழ். மாவட்டத்தில் ஆரம்ப அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கான — எட்டுக் கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படக்கூடிய — திட்டம் ஒன்றை யாழ் அரசாங்க அதிபர் திரு. வ. மாணிக்கவாசகர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிடம் கையளித்துள்ளார்.

மேற்படி திட்டம் அடங்கிய அறிக்கையை யாழ். அரச அதிபர் பிரதமரிடம் கையளித்திருப்பதாக செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டது. [உ-6]

தீவிர தாக்குதல் இடம்பெறுமா?

ராணுவ நடவடிக்கை குறித்து பதில் தர அதிகாரி மறுப்பு

கொழும்பு செப். 25

இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்படவிருக்கிறதா? அடுத்த இராணுவ நடவடிக்கை எப்போது?

இவ்வேளையிலாவது பதிலளிக்கத் தான் தயார் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தெரிவித்தார்.

எதிர்கால இராணுவ நடவடிக்கை பற்றி தாம் சொல்லத் தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

பொதுத் தேர்தலுக்கு முன்பு நடத்தப்பட்டதிலும் பார்க்க தற்போது இராணுவ நடவடிக்கைகள் பெரிய அளவில் நடத்தப்படுவதில்லையே என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

'பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்படவில்லை என்று நான் கூற மாட்டேன், ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது உண்மை தான்' என்றும் அவர் கூறினார்.

5 மாத ஓய்வூதிய நிலுவை அடுத்த மாதம் கிடைக்கும்

கொழும்பு, செப். 25

1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஐந்தமாத நிலுவை ஓய்வூதியப் பணம் ஒக்ரோபர் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கற்றறிநரும் 316 பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்கள பிரதி ஆணையாளர் ஆர். பி. ஜெயட். சொலிரத்னா தெரிவித்தார்.

2 லட்சத்து 75 ஆயிரம் ஓய்வூதியக்காரர்களுக்கு அடுத்த மாதம் 11 ஆம் திகதி நிலுவையாகவுள்ள ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (உ-எ)

தொலைபேசி ஒற்றுகேட்பது தேசியக் குற்றம் அல்ல!

ஜனாதிபதி செயலகம் அறிக்கை

கொழும்பு, செப் 25

தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்பது சட்ட விரோதமான மற்றும் ஒழுக்கமற்ற செயல் என்று கருதமுடியாது.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது!

தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்பது சட்ட விரோதமான மற்றும் ஒழுக்கமற்ற செயல் என்று கருதமுடியாது.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது!

தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்பது பொலீஸ் நிலையங்களுக்கு உள்ள விசேட பிரிவினரால் 1953 முதல் ஐ. தே. க மற்றும் ச. வ. க. அரசுகளில் கீழ் இடம்பெற்று வந்தது.

நாட்டில் பத்தோபத்து' பொதுமக்களின் பாதுகாப்பு ஆயுதங்களுடனான தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்படுகின்றன. அதாவது இது ஒரு தேசியக் குற்றம் அல்ல. இது இன்னைக்கும் புதியது அல்ல; உலகில் ஏனைய பகுதிகளிலும் இது அதிசயமாகக் கருதப்படுவதில்லை.

ஒற்றுக் கேட்பது தொடர்பான— திரிவுபடுத்தப்பட்ட— தகவல்கள் முன்னாள் அரசுக்கு அடுத்தடுத்து ஏற்படுத்தும் நெருக்கடி பரப்பப்பட்டு வருகின்றன. அதில் வாரம் கழுவி இது மேற்கொள்ளப்படுகிறது.

—இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

முன்னேஸ்வரத்தில் சிறிமாவோ

கொழும்பு, செப். 25

சிவராத்திரி முன்னேஸ்வரர் கோவில் தீர்த்த உற்சவம் நடந்த திங்களன்று நடைபெற்றது. அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயகாவும் தீர்த்த உற்சவத்துக்குச் சென்று வந்து கொண்டார்.

ஆலய கற்றாடலில் 400க்கு மேற்பட்ட பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மோதிலால்நேரு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

கொழும்பு, செப். 25

இன்றெதிர்வரும் நபர் ஒருவரால் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்த ஜனாதிபதி சட்டத்தரணி திரு. மோதிலால் நேரு தற்போது கொழும்பு பெரியாஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் சுயநினைவுடன் இருப்பதாகவும் நல்ல அறிவுடன் பேசுகிறார் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதன் இரவு அவர் தனது வட்டிக்காரர் வீடொன்றில் கொழும்பில் உள்ள தமது இல்லத்தில் டேபிள் கொண்டிருந்த போது வீட்டின் ஒரு பக்க ஜன்னல் வழியாக அவர் மீது துப்பாக்கியால் சுடப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

முச்சந்தி முரளி

அப்ப யாரைப் பிடிக்கு சொல்லப்போறீங்க.....!

ஐ.தே.கட்சி அரசில் பொலீஸார் மக்களின் எதிரிகளாக இருந்தனர்

பிரதமர் சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 25

கடந்த காலத்தில் பொலீஸார் மக்களின் எதிரிகளாகச் செயற்பட்டு வந்தார்கள். ஜனநாயக அமைப்பின் சிவில் நிர்வாகத்தை அர்த்தமுள்ளதாக மாற்ற உதவும் வகையில் பொலீஸைப் பேணி வருவதே அரசின் நோக்கமாகும்.

இவ்வாறு கூறினார் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க

பாதுகாப்பு அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை கிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த யுத்தகாலம் அரசியல் லாபம் கருதியே பொலீஸாருக்கு பதவி உயர்வுகளை வழங்கி வந்தது. ஆனால் எமது அரசு பதவி உயர்வுகளை வழங்கும் போது கடமைகளின் நேர்மைக்கும் திறமைக்கும் அதி உயர் முக்கியத்துவம் வழங்கும் என்றும் பிரதமர் கூறினார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக்கொள்ள பொலீஸைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என அங்கு பிரதமர் உறுதி அளித்தார். (ஐ-ஐ)

புலிகளின் குரல் வானொலியில்

25 — 09 — 1994

ஞாயிறு இரவு

★ 8-01 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நடோகுலன் எழுதிய "சத்தியப் போரிக் திலீபன்"

★ 8-20 — விடுதலை கீதங்கள்

8-30 — செய்திகள்

★ 8 40 — லெப்டினன்ட் கேணல் சங்கர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — கிவரஞ்சன் எழுதிய "மக்களாரில் விளைந்த மாவீரன்."

26 — 09 — 1994

திங்கள் காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30—செய்திகள்

★ 7-35— பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — தமிழிழன் எழுதிய தகர்ந்த கோட்டையில் தழைத்த புலிகள் கொடி

இன்று

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் இன்று ஞாயிறு காலை 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் நன்றிய பணிமனையில் நடைபெறும். இன்றைய பயிலரங்கை திரு. சேரம்பசிவமும் ஆய்வரங்கில் "சோதிட பலாபலன்கள்" என்ற பொருளில் திரு. எஸ். பத்மநாதனும் ஆய்வுரை வழங்குவர். (ஒ)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபக்கஸ் லூரியில் ஆண்டு 9, 10, 11ஆம் பிரிவு மாணவர்களுக்கான வண்ணப்போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஈ-117)

★ ★ ★

தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளும் "மதி ஒளி" கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மயிலணி சைவமகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ஈ)

★ ★ ★

தென்மராட்சி இசை ஆசிரியர்களால் நடத்தப்படும் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் நடைபெறும். திருமதி நாகம்மா மகாலிங்கத்தின் வாய்ப்பாட்டு இந்நிகழ்வில் இடம்பெறும். (ஈ-31)

★ ★ ★

சாவகச்சேரி லயன்ஸ் சமூக நலத்தாம் கண்சத்திர சிகிச்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் சாவகச்சேரி மானிப்பாய் வீதியிலுள்ள சத்திர சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் தலைமையான கண் சிகிச்சைக் குழுவினரால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் (ஈ 117)

★ ★ ★

யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தால் நேற்று நடத்தப்படவிருந்த தியாகி திலீபன் நினைவுக் கலந்துரையாடல் நடைபெற முடியவில்லை. இக் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஓ.எச்.ஆர். பாடசாலையில் நடைபெறும்.

அனைத்து [illegible] நிலையங்களின் நிர்வாகிகளும் [illegible] கலந்து [illegible] அழைக்கப்படுகின்றார்கள்.

இன்று நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவாக இன்று நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகளில் பங்கு பற்றும் அமைப்புகளின் விவரம் வருமாறு:

★ மந்திகை அம்மன் கோயிலடியில் மந்திகை தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

★ துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோயிலடியில் — யங்றோயல் நெப்யூன், தனியார் கல்வி நிலையங்கள்.

★ உடுப்பிட்டி நாலடி வைரவர் கோயிலடியில்— கேம்பிரிட்ஜ் தனியார் கல்வி நிறுவனம், மாணவர் மன்றம் தனியார் கல்வி நிறுவனம், கோபு, கலைமகள், திருமகள் ச.ச. நிலையங்கள்.

★ நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில்—வங்கி ஊழியர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள்.

★ கன்னாகம் கிணற்றடி கோயிலடியில்— உடுவில் கன்னாகம் கட்டுத் தோப் முகாம், திலீபன் முகாம், மாவீரர் முகாம், விநாயகர் முகாம், விளாத்திவடி முகாம், மகிழம் ஏ, பி, சி முகாம்கள், சண்முகாம், திலீபன் 1முகாம், திலீபன் 2முகாம், மகிழம் குடியிருப்பு, உடுவில் மடம் மக்கள்.

★ சங்கானை வடக்கம் பரை அம்மன் கோயிலடியில் —உதவி அரசாங்க அதிபர் பணிமனை வர்த்தக ஊழியர்கள்.

★ ஆனைக்கோட்டை முத்த விநாயகர் கோயிலடியில் — மாதர் சங்கங்கள், பிடித்தொழிற்சாலை ஊழியர்.

★ நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் — சென்திரேசா மகளிர் கல்லூரி, தோப்பு அருணோதயா வித்தியாலயம், வளர்மதி ஆ.மி.த.க. பாடசாலை கோப்பாய் வர்த்தகர் சங்கம், உதிபத்திக் குழு ஊரெழு.

★ தீவகம் கோட்டத்தில் யா/ப நோ.க.ச புங்குடு / நயி.ப.நோ.க.ச. பானாவெட்டி, தரப்டிப் பனை குடிருப்புகள்.

★ கைதடி சந்தியில் — ராசபுரி கிராமம், கன்னிநகர் கிராமம், கைதடி கிழக்கு சச நி.

★ சாவகச்சேரி நகர குணாய் பிள்ளையார் கோயிலடியில் — சரசாலை, மட்டுவில், கல்வயல், நுணாவில் தபால் கந்தோர் ஊழியர்கள், உ.ஆ.ஆ. பணிமனை ஊழியர்கள்.

★ கொடிகாமம் ரயில் நிலையத்தடியில் — மாதர் சங்கங்கள், பாவர் பாடசாலை நிர்வாகிகள், கரம்பகம் குறிச்சி, இடைக்குறிச்சி ச.ச. நிலையங்கள்.

★ பனை இரட்டைக் கேணி அம்மன் கோயிலடியில் — சென்பனை மக்கள், தென்னந்தோட்ட ஊழியர்கள்.

அக்காச்சி குடியிருப்பின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா

நாளை இரவு திலீபன் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 25

புத்தூர் வாதரவத்தை அப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் —

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவுக் கூட்டமும் நாளை திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு, குடியிருப்பில் உள்ள மேஜர் சுபாஸ் விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

கோப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு. சோமன் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

தொடர்ந்து மாணவர்களின் நடனம், கிளிலிசை, நாடகம் மற்றும் ராஜன் குழுவினரின் எழுச்சிப் பாடல்கள் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஓ)

மானபங்கம் செய்ய முயற்சி:

மரகாணசபை உறுப்பினரும் கான்ஸ்டபிளும் கைதாகினர்

இரு பெண்களை மானபங்கம் செய்யமுயற்சித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தென்மராட்சி சபை உறுப்பினர் ஒருவரும் அவரது பொலீஸ் மெய்ப் பாதுகாவலரும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு கல்லொடுவிலுள்ள நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மரகாணசபை உறுப்பினரான அம்பாந்தோட்டையைச் சேர்ந்த எம். கே. ரஞ்சித் பெலியத்த பொலீஸைச் சேர்ந்த வான்ஸ்டபிள் குணதுங்கா ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இருசந்தேக நபர்களும் தலா ஆயிரத்து 500 ரூபா காசுப்பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஓ-எ)

உப்பு கொள்வனவு பற்றிய அறிவித்தல்

தமிழீழ உப்பு உற்பத்தி நிறுவனத்தின் பற்றாக்குறையினால் உப்புக் கொள்வனவு செய்யவேண்டாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உப்புஉற்பத்தி நிறுவனத்தினர் வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளனர்.

தமிழீழ உப்புஉற்பத்தி நிறுவனமானது உரிய முறையில் தயாரித்து விநியோகிக்கப்படும் உறியுடைய பாவனைக்கு உகந்தது எனவும் தனியாரால் சோதிக்கப்பட்டு விரைவான செய்யப்படும் தரமற்ற உப்பின் உபயோகம் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் கேளிக்கிறது.

எனவே பாவனையாளர்கள் நன்மைகருதி உப்பு உற்பத்தி நிறுவனத்தின் [illegible] கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஈ)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 25

செஞ்சிலுவை வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன வினை யாட்டுக் கழகம் யாழ்.மின்னர் மண்டபத்தில் இன்று ஞாயிறு நடத்தவிருந்த பரிசளிப்பு விழா குறிப்பிட்டபடி நடைபெறமாட்டாது என்றும்—

அடுத்தமாதம் 2ஆம் திகதிக்கு விழா ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

தெரிவான 20 பேருக்கும் கொழும்பில் பயிற்சி

மக்கள் வங்கியின் யாழ். கிளைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 20 பேரையும் கொழும்புக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளது.

மேற்பயிற்சிக்காக இவர் கொழும்புக்கு அனுப்பு மாறு யாழ் அரசாங்க அதிபர் நற்பணிகளுக்கு அறிவித்துள்ளார். (இ-3)

விதியோரம் பற்றைகள்

கொடிகாமம் கிராமசபைக்கு அருகில் உள்ள கச்சாய் வீதியில் இருந்து உசனுக்குச் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் பற்றைகள் செடி கொடிகள் காணப்படுகின்றன. இதனால் இவ்வழியே போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த விதிய திருத்த நடவடிக்கை எடுக்குமாறு பொது நிறுவனங்கள் சாவகச்சேரி பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இது வரை பாதை திருத்தப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-117)

திருத்தம்

22 - 9 - 1994 ஆம் திகதிய உதயனின் இரண்டாம் பக்கத்தில் வெளியான "வாசகர் ஒட்டப் போட்டி" என்ற விளம்பரத்தில் —

"ஆண்களுக்கான 25 மைல் வாசகர் ஒட்டப் போட்டி" என்ற வரியில் உள்ள இலக்கம் தெளிவின்றி பல பிரதிகளில் 5 மைல் என்று அச்சாகியுள்ளது.

அதனை 25 மைல் என்று வாசிக்கவும்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நல்லூரைச் சேர்ந்த

மகாதேவன் சோமசுந்தரம்

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், பத்திரிகை நிருபர் நாயகம் நிறுவனங்கள் சிலோன் பிறின்றேர்ஸ் லிமிடெட்)

மண்ணில்: 25 — 03 — 1926 விண்ணில்: 25 - 09 - 1993

நாசமுடன் எங்களுடன் வாழ்ந்த நீங்கள் பாதியிலே எம்மை விட்டு பிரிந்ததேனோ? ஆசையுடன் உங்கள் முகம் பார்ப்பதற்கு அழுதழுது ஆலயடன் ஏங்குகிறோம்

மனைவி, பிள்ளைகள், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர் மற்றும் உறவினர்கள்.

நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-9228]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 11 — 06 — 1932 மறைவு: 26 — 08 — 1994

அமரர் முருகேசு பராஜசிங்கம்

(முன்னாள் இ. போ. ச. நடத்துநர்)

அன்பும் பாசமும் நிறைந்து, பண்பின் உறைவிடமாக வாழ்ந்து திடீர் மறைவால் எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்து, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்பு அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் எமது தந்தையாரின் மரணச்செய்தி கேட்டு உடனே வந்த உறவிய அனைவருக்கும் இறுதிச் சடங்கின் போது நேரில் சமுகமளித்தவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரியாத் துயருடன்: குடும்பத்தினர்

உடுவில் கிழக்கு, கன்னாகம். (33047)

எமது மண்ணில் நற்பெயர் பெற்றது



றோயல் றோஸ் ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ் ரால்கம்பவுடர்



அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

(8894)

ST. JOHN'S COLLEGE JAFFNA

ஆண்டு பரிசளிப்பு விழா அழைப்பு

காலம்: 01 — 10 — 1994

நேரம்: காலை 9-30 மணி

இடம்: பீற்றோ ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதி:

அருட் கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் தலைவர் - கிறிஸ்தவ நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள் ஆகிய வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

[சி-9058]

ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 29 — 03 — 1930 இறப்பு: 25 — 09 — 1993

சின்னப்பு தம்பிராசா

(ஓய்வுபெற்ற புகையிரத தலைமைப் பாதுகாவலர்)

திதி: 14 - 10 - 94

முப்பது வருடங்கள் முப்பது நாட்களென முழுமதியாய் வாழ்வித்த என் தெய்வமே.

இவி

உன்னை நான் காண்பதெங்கே என் தெய்வமே
என்னை நீ ஆண்டகாலும் நன்னாளும் எந்நாளோ
(உன்னைநான்...)

நன்று காத்த எமை வாழ்வித்த என் தெய்வமே
என்றும் எங்களுடன் உந்தன் திருப்பதத்தை-நாள்
எங்கும் மனம் குளிர்ந் கண்டிடுவேன் அப்பா
நாம் பெற்றவர் வளர்த்தவர் விட்டிவிலே
[உன்னை நான்...]

வெறுப்புடன் வாழ்ந்தநினைப் போதுமென்றதுவோ-
மோய்
விருப்புடன் கிடப்பதும் வந்தன் வந்தன் கழலடிவோ-
-நம்
இருப்பிடம் நடப்பதும் உந்தன் சோதனைதானோ-
எந்தன்
தரிப்பிடம் நாம்படும் துயர்க்கும் முடிவிலையோ
(உன்னை நான்...)

மடமையினால் வந்த வினைகளெல்லாம்-பாச
வடம் வந்த உணர்வினிலே தீருமையா
நிடம் கொண்ட மனதுடனே நம் குடும்ப
கடமை முடிக்க என்றும் உந்தனுக்கு தாருமையா
(உன்னை நான்...)

முருகனிடம் போறேன் என மூன்றாம் முறை சொல்லி
முடிய கண்ணும் தாம் திறக்கவில்லை-இவி
எனக்குமொரு நல்ல இடம் பாரத்துவைத்து அங்கே
என்னையும் அழைத்திருக வேண்டுமையா.
(உன்னை நான்)

சத்தியமே எம்தலைவன் கொண்டகொள்கையுமாகும்-பெரும்
தத்துவமே யாரும் சத்தறி பக்கமை ஆனாதென்ற-
மந்திரமாகும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரன்

(சி/9194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்றாஸுடன் தனியாக செய்த ஒப்பந்தம் மூலம்
ஐ.நா. தீர்மானம் அமெரிக்காவால் புறக்கணிப்பு

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தலைமையிலான உயர்மட்ட மூவர் குழு கடந்த ஞாயிறு ஹெய்ட்டிக்குச் சென்று நடத்திய பேச்சுக்கள் காரணமாக அமெரிக்கா தலைமையிலான பல்நாட்டுப் படைகளின் படை எடுப்பு கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்டுவிட்டது.

ஜிம்மி கார்ட்டருக்கும் (Jimmy Carter) ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர் ராவுல் செட்றாஸுக்கும் (Raoul Cedras) இடையில் தலைநகர் போர்ட் — ஓப் — பிரின்ஸில் (Port — Au — Prince) செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அமெரிக்கா தலைமையிலான பல்நாட்டுப் படைகள் ஒரு துப்பாக்கி வேட்டும் இன்றி கடந்த திங்களன்று ஹெய்ட்டியில் தரை இறங்கின.

ஒப்பந்தத்தின்படி ஹெய்ட்டி இராணுவத் தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் ராவுல் செட்ராஸ், போர்ட்— ஓப் — பிரின்ஸ் பொலிஸ் அதிபர் ஜோசப் மிச்செல் பிராங்கொய்ஸ் (Joseph Michel Francois) மற்றும் செட்றாஸின் பிரதம உதவியாளர் பிலிப்பே பியாம்பி (Philippe Biamby) ஆகிய மூவரும் அக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் பதவியில் இருந்து விலக வேண்டும்.

இவர்கள் பதவி விலகுவதற்கு முன்னர் ஹெய்ட்டி நாடாளுமன்றம் கூடி இவர்களுக்கும் ஏனையோருக்கும் பொதுமன்னிப்பு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றும். இராணுவ ஆட்சியாளர்கள் பதவி விலகியவுடன் தற்போது அமெரிக்காவில் தங்கி உள்ள முன்னாள் ஜனாதிபதி ஜீன் பேர்ட்ரண்ட் அரிஸ்டைட் (Jean — Bertrand Aristide) ஹெய்ட்டிக்கு வந்து ஜனாதிபதி பதவியை ஏற்பார்.

கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்ட படை எடுப்பு

ஹெய்ட்டியில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்காக கடந்த திங்கட்கிழமை அமெரிக்கா தலைமையிலான பல் நாட்டுப் படைகள் ஹெய்ட்டி மீது படை எடுப்பு நடத்த இருந்தன. இதற்கு "ஜனநாயகத்தை நிலை நாட்டும் நடவடிக்கை" (Operation - Uphold Democracy) என்று பெயரும் சூட்டப்பட்டிருந்தது.

ஜிம்மி கார்ட்டர், அமெரிக்காவின் முன்னாள் கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் கொலின் பவல் (General - Colin Powell) அமெரிக்க செனட் சபையின் ஆயுதப் படைத் பிரிவுத் தலைவர் செனேட்டர் சாம் நன் (Senator SamNunn) ஆகியோர் கொண்ட மைமைாய்ந்த அமெரிக்க தூதுக் குழு ஞாயிற்றுக்கிழமை ஹெய்ட்டி சென்றிருந்தது.

1991 வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்கா தலைமையிலான பல் நாட்டுப் படைகள் பெரிய இழப்புகளைத் தவிர்த்து ஈராக்கைத் தோற்கடிப்பதில் ஜெனரல் கொலின் பவல் பெரும் பங்காற்றி இருந்தார்.

இத் தூதுக் குழுவினர் தலைநகர் போர்ட்— ஓப் — பிரின்ஸில் ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர் ராவுல் செட்றாஸைச் சந்தித்து பல மணி நேரம் பேச்சு நடத்தினர். இதனைத் தொடர்ந்து ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆக்கிரமிப்புப் படைகளாக அன்றி வெறும்

காசமும் வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டை விட்டு வெளியேற செட்றாஸ் மறுப்பு

இதனால்தான் கார்ட்டர் — செட்றாஸ் ஒப்பந்தம் கண்டனங்களை எதிர்நோக்கி வருகிறது. ஒப்பந்தத்தின் பிரகாரம் பதவிதுறந்த பின்னர் தாம் நாட்டை விட்டு வெளியேறத் தேவையில்லை என்று செட்றாஸ் கூறுகிறார். அவரின் லெப்டினன்ட் ஜெனரல் பதவியும் அமோ, செட்றாஸ் நாட்டில்

அமைதிகாக்கும் படைகளாக கடந்த திங்கட்கிழமை ஹெய்ட்டிக்கு பல்நாட்டுப் படைகள் அனுப்பப்பட்டு விட்டன. ஒப்பந்தத்தின் பிரகாரம் ராணுவ ஆட்சியாளர்கள் ஒரு மாதம் அதாவது அக்ரோபர் 15 ஆம் திகதி வரை ஆட்சியில் இருக்கப் போகிறார்கள். அத்துடன் கடந்த மூன்றாண்டு காலமாக ஹெய்ட்டியில் ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்களைக்

இருந்து வெளியே வேண்டும் என்று கோருகிறது.

ஐ. நா. அதிருப்தி

கார்ட்டர் — செட்றாஸ் ஒப்பந்தம் ஐ. நா. விலும்

வெளி உலகம்

அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. ஹெய்ட்டிக்கான பிரதம ஐ. நா. தூதுவர் டன்டே கபுடோ தமது

ஹெய்ட்டியைவிட்டு வெளியேறிவிட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி அரிஸ்டைட் நாடு திரும்பி பதவி ஏற்க வேண்டும்.

ஐ. நா. தீர்மானத்தில் ராணுவ ஆட்சியாளர்கள் பதவிதுறப்பதற்கு காலக்கெடு விதிக்கப்படவில்லை.

ஒக்ரோபர் - 15 காலக்கெடு ஐ. நா தீர்மானத்துக்கு முரணானது.

கார்ட்டர் —செட்றாஸ் ஒப்

பொறுப்பு ராணுவ ஆட்சியாளர்களிடமே விடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தலைநகர் போர்ட் — ஓப் — பிரின்ஸில் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்டைடுக்கு ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் ஹெய்ட்டி பொலிஸாரினால் மிகவும் கொடூரமான முறையில் அடக்கப்பட்டுள்ளன. அரிஸ்டைட் ஆதரவாளர் ஒருவர் அடித்துக் கொலை செய்

அக்.15 காலக்கெடு ஹெய்ட்டியில் மேலும்
அட்டூழியங்களுக்கு வழிவகுக்கலாம்

கொலை செய்தும் பல பெண்களைக் கற்பழித்தும் அட்டூழியங்கள் புரிந்த இராணுவ ஆட்சியாளர்களுக்கு பொது மன்னிப்பும் வழங்கப்படப் போகிறது.

முன்னாள் ஜனாதிபதி அரிஸ்டைட் ஆதரவாளர்களை வஞ்சம் தீர்ப்பதற்கு ராணுவ ஆட்சியாளர்களுக்கு அக்ரோபர் 15 ஆம் திகதி வரை அவ பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தம் செய்வது குறித்து அமெரிக்கா தன்னுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று டன்டே கபுடோ குற்றம் சாட்டியுள்ளார்.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின்படி ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் உடனடியாகத் தமது பதவியைத் துறந்து பந்தத்தின் பிரகாரம் அமெரிக்கா தலைமையிலான பல்நாட்டுப் படைகள் தற்போது ஹெய்ட்டிக்கு அனுப்பப்பட்ட போதிலும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரை— அதாவது ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்கள் பதவி விலகும் வரை ஹெய்ட்டியின் உள் விவகாரங்களில் தலையிட முடியாது.

ஒக்ரோபர் 15 வரை ஹெய்ட்டியில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டும் யப்பட்டுள்ளார்.

இப்படியான நடவடிக்கைகள் இனியும் தொடராது பார்த்துக் கொள்ளப் போவதாக அமெரிக்கா கூறுகிறது.

ஆயிரம் பேர் கொண்ட அமெரிக்க ராணுவ பொலிஸ் படை ஒன்றை ஹெய்ட்டிக்கு அனுப்புவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஹெய்ட்டியில் நிலை கொண்டுள்ள பல் நாட்டுப் படைகள் இதுவரை எதிர்ப்பு

எதனையும் எதிர்நோக்கவில்லை.

கார்ட்டருடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் தாம் நாட்டை விட்டு வெளியேறத் தேவை இல்லை என்று தற்போது செட்றாஸ் கூறுகிறது. ஹெய்ட்டியில் புதிய நெருக்கடி உருவாகும் அறிகுறிகள் கருதப்படுகிறது.

கார்ட்டரின் சாதனைகள்

1979 காம்ப டேவிட் ஒப்பந்தம் மூலமும் —

1993 ஜூனில் வடகொரியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையினால் அணு ஆயுத நெருக்கடி ஒன்றைத் தீர்த்தது மூலமும் — சர்வதேச புகழ்பெற்ற ஜிம்மி கார்ட்டர் இம்முறை சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு தெரிவு செய்யப்படலாம்.

அக்டோபர் 14 ஆம் திகதி நோர்வேயில் இது குறித்து அறிவிக்கப்பட இருக்கிறது.

1977 இல் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜெரோல்ட் போர்ட்டை (Gerald Ford) தோற்கடித்த ஜிம்மி கார்ட்டர் 1981 வரை பதவியில் இருந்தார்.

1981 ஜனாதிபதித் தேர்தலில் றொனால்ட் றேகனிடம் (Ronald Reagan) அவர் தோல்வி கண்டார்.

1980 இல் அமெரிக்காவுக்கு பெரும் சவாலாக விளங்கிய ஈரானில் அமெரிக்க தூதரக முற்றுகைப் பிரச்சினையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சாரன்

கிளின்ரனுக்கு உற்சாகமூட்டிய வேதாகம வசனங்கள்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் முக்கிய முடிவுகளை எடுக்கும்போதெல்லாம் பைபிளை வாசிக்கத் தவறுவதில்லை.

ஹெய்ட்டி மீது படை எடுக்கும் முடிவை எடுத்த பின்னரும் கிளின்ரன் பைபிளைப் புரட்டினார்.

சங்கீதம் 72ஆம் அதிகாரத்தில் இருந்த "ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து ஏழைகளின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்" என்ற வசனம் கிளின்ரனை உற்சாகப்படுத்தியது.

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பிதழ்

கால்நடை தீவன தட்டுப்பாட்டை நீக்க
உதவுகின்ற உலர்புல் சேமிப்பு முறை

எந்த பசுந்தீவனத்தையும் அது முற்றுவதற்கு முன் வெட்டிக் காயவைத்து எடுப்பின் அது உலர்புல் எனப்படும். மெல்லிய தண்டுள்ளவையாகவும், அதிக இலைகளைக்கொண்டு உள்ளவையாகவும் காயவைத்தெடுத்த பின்பும் போதிய வு சத்து உடையதாகவும் உள்ளன.

புல்வகைகளை, உலர் புல்லாக மாற்றுதல் பயனுடையதாகும். செற்றேறியா அறுகம்புல், நட்சத்திரப்புல், செனிறஸ் (கொடுக்கட்டை புல்) போன்றவையும் பயத்தை, இப்பில் இப்பில், சௌபி, டெஸ்மோடியம் போன்ற அவரையினங்கள், உலர் பொருளாக பாதுகாத்து வைத்து பயன்படுத்தக் கூடியவை.

எமது பிரதேசங்களில், புரட்டாதிமாத கடைசிப் பகுதியில் ஆரம்பிக்கும் காலபோக மழை, மார்கழி மாதத்துடன் முடிவடைகிறது. இந்த மழையுடன் பெருமளவு புல் உற்பத்தியாகி முழுமையாக பயன்படாமல் வீணாகின்றது.

காலபோக மழையுடன் பெருமளவில் உற்பத்தியாகும் புல்லை தை, மாசி, மாதங்களில் வெட்டி உலர்புல்லாக பாதுகாப்பதன்மூலம் வரண்ட காலங்களில் புல் கிடைக்காத போது இந்த உலர் புல்லை பயன்படுத்த முடியும்.

தயாரிக்கும் முறைகள்

தயாரிக்கப்படும் உலர் புல்லானது சத்துடையதாகவும், நல்ல மணமுடையதாகவும், இலைத்தன்மையுடையதாகவும், வளையும் தன்மையுடையதாகவும், பச்சைநிறமுடையதாகவும், பூஞ்சணம் மற்றும் களைகள் அற்றதாகவும் இருத்தல் அவசியமானது. இதற்காக உலர்புல் தயாரிக்கும்போது சில முறைகளை கையாளவேண்டும்.

★ வெட்டப்படும் புல் அல்லது அவரையினம் முற்றாததாக இருத்தல் வேண்டும். பூக்கத் தொடங்கும்போது வெட்டுவதுபொருத்தமானது. வெட்டிய பின் 5—6 மணித்தியாலம் வெட்டிய இடத்திலேயே (புற்தரையிலேயே) விடவேண்டும். அதன் பின் வரிசைகளில் அடுக்கவேண்டும்.

★ நீர்த்தன்மை 15—20% வரும்வரை நன்கு பிரட்டி, பிரட்டி ஒருகெவர் தடி கொண்டு கிளறி கிளறி காயவிடவும். புல்லை கையிலெடுத்து முறுக்கிப்பார்க்கும் போது நீர்த்தன்மை வெளிப்படாது இருப்பின், திருப்திகரமாக காய்ந்ததாக கொள்ளலாம். இரவில் சாக்குகளால் மூடிவைத்து பகலில் நன்கு காயும் வரை காய விடுதல் சிறந்ததாகும்.

★ நன்கு காய்ந்தபின்னர் கட்டுகளாக கட்டி தொழுவங்களில் வைக்கலாம் அல்லது வெளியே வைக்கோல் போர் போல அடுக்கி, மேற்பகுதியை மூடி விடலாம்.

★ உலர் புல்லை அடுக்கி சேமித்து வைக்கப்படும் தொழுவங்கள் திறந்த பக்கங்களை உடையதாகவும் நிலம் சிறிது சரிவாகவும் இருத்தல் வேண்டும். காற்றோட்டம் இருக்கக்கூடிய வகையில் உலர்புல் கற்றைகளை ஐதாக அடுக்குதல் வேண்டும். சேமிக்கப்படும் உலர்புல் நனையவோ சூடேறவோ கூடாது.

கால்நடை தீவனத் தட்டுப்பாட்டை நீக்க கூடுதலான புல் கிடைக்கும்போது உலர் புல்லாக சேமிப்பது எமது பிரதேசத்துக்கு பொருத்தமான இலாபகரமான, சுலபமான முறையாகும்.

தகவல்:
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

அபிவிருத்தி

மண்ணுக்கும் மக்களுக்கும் அளப்பரிய
சேவைபுரிந்தவர் டாக்டர் பொன்னம்பலம்

இக்கட்டான சூழ்நிலையில் ஈடுசெய்ய முடியாத இழப்பு

யாழ்ப்பாண மண்ணிலுள்ள கீரிமலையில் கரகம்பாலை என்கின்ற கிராமத்தில் 1928 ஜனவரி 16 ஆம் திகதி சுப்ரமணியம் தம்பதிகளுக்குப் பிறந்த டாக்டர் எஸ். பொன்னம்பலம் தமது ஆரம்பக்கல்வியை தமது கிராமத்தின் அயலூரிலுள்ள தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கற்றார்.

ஆரம்பக்கல்வியின் போதே வகுப்பறையில் தலைசிறந்த மாணவனாகத் திகழ்ந்த பொன்னம்பலம் அவர்களை பெற்றோர் அவருடைய உயர் கல்விக்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்த்தனர்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழகத்துக்கான அனுமதிப் பரீட்சையில் அதிகளவு புள்ளிகள் பெற்று 1952 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு மருத்துவ பீடத்திற்கு முதற்றடவையிலேயே முதல் தர மாணவனாக பிரவேசித்தார்.

அங்கு ஐந்து வருட காலம் மருத்துவ மாணவனாகப் பயின்று பல சிறப்புச் சித்திகளுடன் 1957 ஆம் ஆண்டு மருத்துவராக வெளியேறினார்.

மருத்துவராக வெளியேறியதும் மருத்துவர்களுக்குரிய கட்டாய உள்ளகப் பயிற்சியை தெனியாய மருத்துவமனையிலேயே 1957 ஆம் ஆண்டு மே மாதம் 19 திகதி ஆரம்பித்த டாக்டர் எஸ். பொன்னம்பலம் எதுவித இடையூறுமின்றி தன்னுடைய ஒரு வருட கால கட்டாயப் பயிற்சியை வெற்றிகரமாக 1958 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி முடித்துக் கொண்டார்.

சுகாதார மருத்துவ அதிகாரியாக

பின்னர் சுகாதார மருத்துவ அதிகாரியாக புத்தளத்தில் கடமை புரிந்துவிட்டு மருத்துவ அதிகாரியாக மொனராகலை மாவட்டத்தில் கடமை ஆற்றினார்.

கொழும்பு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவனாகப் பயிலுகின்ற பொழுதிலேயே சத்திர சிகிச்சைப் பாடங்களில் மிகவும் ஆர்வம் கொண்ட வராகத் திகழ்ந்த டாக்டர் எஸ். பொன்னம்பலம் அவர்களுக்கு கற்றலின் மீது இருந்த வெறித்தனமான பசி சாதாரணMBBS பட்டத்துடன் அவரைத் திருப்தி கொள்ள விடவில்லை.

அந்த நேரத்தில் அவரை யொத்த சக மருத்துவர்களிடையே ஐஸம் தெரிவித்த போதிலும் தனது நாற்பதாவது வயதில் துணிச்சலோடு சத்திர சிகிச்சைத் துறையில் நிபுணத்துவம் பெறும் பொருட்டு 1968 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குச் சென்றார்.

இங்கிலாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழக சத்திர சிகிச்சை நிபுணத்துவப் பட்டத்தை (Fellow of Royal College of Surgeon -Frcs Edinburgh) 1971 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டார்.

தாயகப்பற்று

வழமையாக இந்த நிபுணத்துவப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பலர் அங்கேயே தங்கி விடுவது வழக்கம்.

டாக்டர் பொன்னம்பலம்

ஆனால் டாக்டர் எஸ். பொன்னம்பலம் அவர்கள் அடிக்கடி கூறுவார் "பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்த மறுநாளே விமானத்தில் ஊருக்குப் புறப்படுவேன்" என்று.

அதேபோன்று பரீட்சையில் சித்தி அடைந்ததும் தமக்கு இருந்த நாட்டுப்பற்றினால் உடனேயே ஊருக்குத் திரும்பி வந்து விட்டார்.

1972 ஜனவரி ... பொது மருத்துவமனையில் கன்னி பொது சத்திரசிகிச்சை நிபுணராகப் (General Surgeon பொறுப்பேற்ற டாக்டர் எஸ். பொன்னம்பலம் நான்கு வருடங்கள் அங்கு சிறப்பாகக் கடமை புரிந்து விட்டு, பிறந்த மண் மீது இருந்த பற்றினால் 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைக்கு பொது சத்திரசிகிச்சை நிபுணராக மாற்றலாகி வந்தார்.

18 வருடங்கள் சேவை

அன்றிலிருந்து தனக்கு ஏற்பட்ட திடீர் நோய் காரணமாக கொழும்புக்கு கட்டாயமாக போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்வரை— 1994பெப்ரவரி 15ஆம்திகதி மட்டும் — பதினெட்டு வருட காலமாக யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் கடமையாற்றினார்.

பல்வேறு வகையான இக்கட்டான நெருக்கடியான சூழ்நிலைகளை யாழ். போதனா வைத்தியசாலையும் தமிழ் மக்களும் சந்தித்த வேளையில்—

இவருடன் அப்போது கடமை புரிந்த பல நிபுணர்கள் யாழ். போதனாசாலையையும் மக்களையும் விட்டு வசதி வாய்ப்புக்களைத்தேடிப் ... மக்களுக்கும் மண்ணுக்கும் தனது கடமைகளை செவ்வனே செய்தார் டாக்டர் எஸ். பொன்னம்பலம் அவர்கள்.

தனது கடமையையே தெய்வமாக வாழ்க்கை நெறியாக நேசித்த டாக்டர் எஸ். பொன்னம்பலம் இங்கிலாந்தில் இருந்த போதும் சரி, இங்கு இருந்தபோதும் சரி விருந்துபசாரங்களில் குடிபார்ப்பதற்குக் கூட மதுசாரமோ, சிகரட்டோ அருந்தாதவர், மாமிச உணவை வாழ்க்கையில் ஒருமுறைதானும் புசித்துப் பார்க்காத கடுமையான சுத்தமான சைவ ஆசார நெறிகளைக் கடைப்பிடித்த சிறந்த பண்பாளர்.

தனது திருமணத்தன்று கூட அரைநேரம் லீவு எடுத்து விட்டு நேராக சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு வந்துவிட்டதாக இவர் கூறுவார். இவரது கடமை உணர்வுக்கு இது ஒருநல்ல எடுத்துக்காட்டு.

யாழ்ப்பாண பொது மருத்துவ மனையில் சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமை புரிந்த இந்த பதினெட்டு வருடகாலத்தில் யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தின் (Jaffna Medical Association), உபதலைவராகவும் பின்னர் தலைவராகவும் அதனைத் தொடர்ந்து அவர் இறக்கும் வரையும் சங்கத்தின் நிதியச் சபை (Board of Trustees) உறுப்பினராகவும் கடமை புரிந்தார்.

மேலும் 1978ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது உழைத்ததுடன் மருத்துவபீட மாணவர்களுக்கான சத்திர சிகிச்சை நெறியை (Surgery) கற்பித்து வந்தார். தவறாமல் விரிவுரைகள் எடுத்தார். தனது பதினெட்டு வருட சேவையில் ஏறக்குறைய நூறு புதிய வைத்தியர்களுக்கு உள்ளைப்பயிற்சி நெறியை வழங்கியவர் அவர்

இந்திய படையினர் காலத்தில்

1987ஆம்ஆண்டு இந்திய அமைதிப்படை எமது மண்ணை ஆக்கிரமித்து அக்டோபர் மாதம்21ஆம் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொது வைத்திய சாலைக்குள் அத்துமீறிப் புகுந்து சூழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் ஏ. சிவா தசுந்தரம்.மற்றும் டாக்டர் கணேசரத்தினம், பரிமேலழகர் உட்பட 17ஊழியர்களையும் 53 நோயாளர்களையும் கொலைசெய்த வேளையில் டாக்டர் எஸ். பொன்னம்பலம் தனி பொறுப்பு வாய்ந்த சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமை புரிந்ததோடு, அதன் பின்னரும் போதனா வைத்தியசாலை மூடப்படாமல் தொடர்ந்தும் சேவை வழங்க மனம் சோராமல் முழுமூச்சாகப் பாடுபட்டவர்.

மீண்டும் 1990 ஆம் ஆண்டு ஈழப்போர் II ஆரம்பமானதும் இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம் யாழ். போதனா வைத்திய சாலை அதன் சரித்திரத்திலேயே முதன் தடவையாக மூடப்பட்ட போதும் நெருக்கடியான போர்க்காலச் சூழ்நிலையில் பொது மருத்துவனை குறிப்பாக சத்திரசிகிச்சைப் பிரிவு இயங்க வேண்டுமென்று ஏனைய வைத்திய நிபுணர்களுடன் இணைந்து போதனா வைத்தியசாலையை தற்காலிகமாக மானிப்பாய் கிறீன் மெமோரியல் ஆஸ்பத்திரியில் இயங்க வைத்தார்.

ஈடு செய்யமுடியாத இழப்பு

இவ்வளவு பெருந்தகையின் இழப்புஅவருடைய மனைவிக்கும்இரண்டு பெண்பிள்ளைகளான செல்விகள் கல்யாணி, மாயாவிற்கும் -

யாழ். போதனா வைத்தியசாலைக்கும், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கும் —

முழுத் தமிழ் சமுதாயத்திற்கும்— பேரிழப்பாகும்.

டாக்டர் எஸ். பொன்னம்பலம் போன்ற திறமையான ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் சேவை மிக அவசியமாகத் தேவைப்பட்டுக் கொண்டிருக்கின்ற நெருக்கடியான இன்றைய சூழ்நிலையில் எம் மக்களுக்கும் இது ஒர் பேரிழப்பாகும். ★

டாக்டர் எஸ். பி. ஆர் சீர்மாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

முட்டையிடும் கறுப்பு கோழிகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு; தொகைக்கு விலைக் கழிவு உண்டு. தொடர்பு 698/15, தலையாழி வயிரவர் கோயிலடி, சம்பதி வீதி, யாழ்ப்பாணம். [33054]

பூச்சாடிகளும், பூங்கொத்துகளும் விற்பனைக்குண்டு. பிளாஸ் பரடைஸ், 152/3, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (33038)

அழகிய மொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. கார் கஜேந்திரன், கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [33040]

ஹல்டா (Halda) தமிழ் நட்சத்திர இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [7927]

5850 சதுரஅடி தனிநில அளவுள்ள பாரிய வசதி தொழில் நிறுவனத்திற்கு ஏற்ற கட்டடம் காங்கேசன்துறை பிரதான வீதியில் மருதனார்மடம் சந்திக்கு அருகில் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: செ. பொன்னம்பலம், இணுவில், கன்னாகம். (33019)

இறைச்சகோழி விற்பனை

சுத்த இன இறைச்சிக் கோழிகள், நிறமும் குறைந்த விலையில் காலை 7-00 தொடக்கம் கத்தரி செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33026]

இறைச்சகோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி நியாயமாகச் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். 882, மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். (32928)

வீடு, வளவு விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு அமரசுவி பாடசாலைக்கு அருகில் 50 பரப்பு தென்னைமரங்கள் உள்ள காணியும், வீடும் விற்பனைக்குண்டு. காணியைப் பிரித்தும் வாங்கலாம். தொடர்பு கொள்ளவும்: ஆ. நிரவியம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. [7654]

"அபசயாசக்கொப்பி"

பாடசாலைச் சீருடைகள் அலுவலக உடைகள் பளிச்சிடும் வெண்மையுடன் ஒளிரச் சலவை நேர்த்தைச் செமிக்க மிக்க விலைக் சலவைத்தூள் உதவுகிறது. மிக்க விலைச் சலவைத்தூள் வெற்றுப்பக்கற்றுகள் 25 சேர்ப்பித்த ஒரு அப்பியாசக்கொப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 'மிக்கவைற்' (இ-9220)

ENGLISH, MATHS

O/LDistinction,Creditபெறுபேறடைவதற்கும், ஆண்டு 6 தொடக்கம் 10 வரை மூன்றாம் தவணைப் பரீக்ஷையில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்கும் B Sc. ஆசிரியராக் கற்பிக்கப்படுவர். இல. 85, மணல்தறை றோட், திருநெல்வேலி. (33044)

புறொயிலர் விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு கத்தரி செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி (பஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (33037)

மணிக்கூடுகள் தேவை

பழைய மேசை மணிக்கூடுகள், வைக்கிடாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக விலைக்கு வாங்கப்படும். ஆர்வலர் கூறும் விலையாரம் திருத்திக்கொடுக்கப்படும். அமரர் வாச் வேக்ஸ், உரிமையாளர்: த. தேவதாஸன், (காளிகோயில் முன்பாக - மேல்மாடி), 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [7655]

மணமக்கள் தேவை

குறிமறிற 38, 36 வயது T Aக்கும், 32 வயது டாக்டருக்கும். குறிமுள்ள 31, 34 வயது டாக்டர் பெண்களுக்கும் தேவை. மற்றவை ஏஜென்சி கொய்யாத்தோப்டம். [33053]

துவரிவிட்டது

ஊறணி காங்கேசன்துறைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரபாபிள்ளை மதியழகன் எம்பரமு அடைமாள அட்டை கன்னாதிட்டியில் இருந்து கோண்டாவில் பால் வழங்கும் செயலகத்திற்கு இடையில் 22-9-94 தவறி விழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புவனமதாஸ், குளாவை வயிரவர் கோயிலடி, சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7653)

30-9-94 இரவு மட்டுவில், சாரசாலை றோட்டில் 570432788V இலக்க அடையாள அட்டை, தான்டிக்குளப் பாஸ் மற்றும் பொருள்களுடன் டிரவுசர் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வடிவேலுமுதலி றோட்டு வீடியோ சென்ரர் மூலமாவது தொடர்பு கொள்ளவும். இல. 697, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33043)

21-09-94 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து கோண்டாவில் செல்லும்போது எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. சுந்தரம் M. S. லேன், கோண்டாவில் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். [33057]

மணப்பெண் தேவை

யாழ். இந்து கனடா வாசி, Computer Consultant and System Analyst with Accounting Qualificationக்கு மணப்பெண் தேவை. வயது 30, ரேனி. உதயத்தம் செல்வாய் C/o 36, மே/பா உதயன், 83, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [7649]

கல்வியியல்

உளவியலும் நவீன கற்பித்தலும் கலை இலக்கியக் கோட்பாடுகள் கல்வி உளவியல் கருத்துக்களும். ஆர்வலர்: கலாநிதி சபா, ஜெயராஜா. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (இ-9158)

தேவை

ஓரளவு ஆங்கில அறிவுள்ள பெண் விற்பனையாளர்/காசாளர் தேவை. நல்லூர் கற்றாடலில் வசிப்பவர்கள், சொந்த சைகிளுடனோ கொள்வனவு செய்து திரும்பி வருவர். சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இன்று தொடக்கம் ஆய்வுகூட பரிசோதனைகள் ஒழுங்காக நடைபெறும் என்று அறியத்தருகிறோம்.

அ. சுந்தரலிங்கம்
M. L. T.

(7656)

புலிகளின் குரல் வானொலி நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டிகள் பற்றிய அறிவித்தல்

"புலிகளின் குரல்" வானொலி ஆரம்பித்து 1994 — 11 — 21 உடன் நான்காம் ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி பின்வரும் போட்டிகள் நடத்தப்பட்டுப் பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் ஒலிபரப்புக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களின் ஆக்கங்களை 31 — 10 — 1994 க்குப் பிந்தாமல் "புலிகளின் குரல்", யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. *வானொலி நாடகப் பிரதி*

வானொலி நாடகப் பிரதி ஆகக்கூடியது 20 நிமிடங்களுக்கு ஒலிபரப்பக் கூடியதாக அமைதல் வேண்டும். பிரதியை எழுத்தாளரின் 10 பக்கங்களுக்குக் குறையாமலும் 12 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2. *சிறுகதை*

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதனவாகவும் பிரசுரிக்கப்படாதனவாகவும் இருத்தல் வேண்டும். 4 பக்கங்களுக்குக் குறையாமலும் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. *கவிதை*

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பும் நேரம் 5 நிமிடங்களுக்கு குறையாமலும் 10 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறியிற் அனுப்பப் வேண்டும். ஆக்கங்கள் தமது சுயமுயற்சியில் எழுதப்பட்டதென்றும் இதற்கு முன் ஒலிபரப்பவோ அல்லது வேறெவ்வகையிலும் வெளிவரவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பி வைக்கவும். ஆக்கங்கள் எமது போராட்டத்தை அமைப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருவியாகவோ அமைதல் வேண்டும் விதிமுறைகளுக் கமையாமல் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

புலிகளின் குரல்,
தமிழீழம்.

(இ-8181)

செட்றாஸுடன்...!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது ஈராவிய புரட்சியாளர்களினால் ஒரு வருடத்துக்கு மேலாக பணயம் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க தூதரக ஊழியர்களை விடுவிக்கும் முயற்சியில் அவரும் தோல்வி கண்ட நிலையில் ஜிம்மி கார்ட்டர் 1981 ஜனாதிபதித் தேர்தலை எதிர் நோக்கி இருந்தார்.

அரிஸ்ரைட்

கிறிஸ்தவ மதகுருவாக இருந்து அரசியல் வாதியாக மாறிய அரிஸ்ரைட் 1986 ஆம் ஆண்டு டுவாலியர் (Duvalier) குடும்பத்தின் 29 வருட கால ஆட்சி அஸ்தமனமாவதற்கு காரணமாக இருந்தார்.

தேவாலயத்தில் அவர் ஆற்றிய உரைகளே டுவாலியர் குடும்பத்தின்சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சிக்கு வித்திட்டன.

ஜனநாயக ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்காக ஹைட்டி மீது படை எடுப்பு நடத்தியது அமெரிக்காவின் நோக்கமாக.

ஹைட்டி பிரச்சினையை அமெரிக்கா கடந்த மூன்று ஆண்டுகளாக ஒழுக்கத்தோடு இதே இலக்கோடுதான்.

கடைசி நேரத்தில் கார்ட்டர் குழுவினரின் சமாதானத் தூத அமெரிக்காவுக்கு வெற்றியைக் கொடுத்து உதவி இருக்கிறது.

இதனால் ஒரு துப்பாக்கி வேட்டும் இன்றி பன்நாட்டுப் படைகள் ஹைட்டியில் தரை இறங்கமுடிந்தது.

1991 புரட்சியின் போது பதவி நீக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைட்டை மீண்டும் பதவியில் அமர்த்தவும் —

ஹைட்டியில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும் — அமெரிக்கா தலைமையிலான பன்நாட்டுப் படைகள் இன்னும் எத்தனையோ கட்டங்களைக் தாண்டவேண்டிய நிலையில் உள்ளன.

குழப்பநிலை

ஹைட்டியில் நிலவரம் குழப்பமாக இருப்பதாக ஆரூடம் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹைட்டி இராணுவத்தினதும் பொலீஸினதும் பலத்தை மட்டுப்படுத்தும் நோக்குடன் அமெரிக்கா தனது படைப் பலத்தை 9 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அதே சமயம் இராணுவ ஆட்சியாளர்கள் தமக்கு ஆதரவு இருப்பதாகக் காட்டிக் கொண்டு மக்கள் அரசாங்கம் ஒன்றை அமைத்து தேர்தலுக்கு நாளும் குறிப்பிடுகின்றனர்.

ஹைட்டி இராணுவத்திடமிருந்து வரை ஆயுதங்களை பறிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. அரிஸ்ரைட் ஆதரவாளர்களைக் காக்கிவரும் ஹைட்டி பொலீஸாரை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கையிலும் அமெரிக்கா இறங்கி உள்ளது.

ஹைட்டியில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா சிறிது, சிறிதாக பொருளாதாரத் தடைப் பிரயோகத்தைக் குறைக்கின்றதென்றுகின்றன.

அரிஸ்ரைட்டை மீண்டும் பதவியில் அமர்த்தி ஹைட்டியில் மீண்டும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அமெரிக்கா மிகந்த சாதுரியமாகவும், உறுதியுடனும் செயற்படவேண்டிய நிலைமை உருவாகி வருகிறது. ★

G. C. C.

வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. Dக்கு முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை (ENT), குருதி, மலப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (B. C. G) இங்கு நடைபெறுகின்றன.

■ நிர்வாகி

[33059]

PARA TROPHY

ராசி சிலக் நறுவனத்தின்
ஆதரவில்
தொதோண் விளையாட்டுக் கழகம்
நடத்தும்
மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

அமரர் க. பரராஜசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக நெதோண் வி. கழகத்தினரால் நடத்தப்படவுள்ள 6 பேர் கொண்ட 5 ஓவர் மட்டுப்படுத்தப் பட்ட கிரிக்கட் சுற்றுப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி: 04 — 10 — 1994
விண்ணப்ப கட்டணம்: 60/-

போட்டிகள் யாவும் 07—10—1994 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ விண்ணப்பத்திரம் கிடைக்கும் இடங்கள்:
✱ சிவன் வைத்தியசாலை, 353, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
✱ நெதோண் வி. கழகம், செங்குந்தா லேன், கல்வியங்காடு.

[7931]

யாழ். றோட்டறிக் கழகம்
கல்விப் பரிவர்த்தனைக் குழு

ROTARY INTERNATIONAL

GROUP STUDY EXCHANGE
of the Rotary Foundation of Rotary International

சர்வதேச றோட்டறியின், றோட்டறி நிறுவனத்தின் ஆதரவிலான கல்விப் பரிவர்த்தனைக் குழுத் திட்டத்தின் கீழ் இங்கிலாந்து றோட்டறி மாவட்டத்தின் சார்பில் செல்லும் 4பேர் கொண்ட கல்விப் பரிவர்த்தனைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ நிரந்தரமான தொழிலிலுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக தொழிற்றுறை அலுவலர்கள், அரச மற்றும் தனியார் வங்கி அலுவலர்கள், தனியார் துறை அலுவலர்கள் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பதாரிகளது உயர் கல்வித்தகைமை, தொழிற்றுறைத் தகைமை, ஆங்கில மொழியில் சரளமாகப் பேசும், எழுதும் ஆற்றல் என்பன கவனத்திற் கொள்ளப்படும்.

★ வயதெல்லை இல்லை, கற்றலாக்காலம் 4முதல் 6வாரங்கள் கல்விப் பரிவர்த்தனைக் குழு செல்லும் நாடு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

✱ றோட்டறக்ற் கழக உறுப்பினர்களும் விண்ணப்பிக்கலாம் றோட்டறிக்கழக உறுப்பினர்களின் குடும்பத்தினர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

யாழ். றோட்டறிக்கழகம் சார்பில் இருவர் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட தேர்வுக் குழுவிற்கு சிபார்சு செய்யப்படுவர். இறுதித் தேர்வு கொழும்பில் றோட்டறி மாவட்ட தேர்வுக் குழுவினரால் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் பிரயாணச் செலவினை றோட்டறி நிதியமும், கற்றலாக் காலத்தினான செலவினை உபசரிக்கும் றோட்டறி மாவட்டமும் பொறுப்பேற்கும்.

மேலதிக விவரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Rtn, ஈ. சரவணபவன்
தலைவர். யாழ். றோட்டறிக் கழகம்,
மே/பா. உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Rtn. எஸ். சோதிலிங்கம்
சர்வதேச சேவை இயக்குநர்
யாழ். றோட்டறிக் கழகம்,
மே/பா ஹற்றன் நஷனல் வங்கி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: 1994 - 09 - 28

Rtn. தி. திருநந்தகுமார்,
செயலாளர், யாழ் றோட்டறிக் கழகம்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-9124)

YOGI HOME SCIENCE ACADEMY

கேக் ஐசிங், மாக்சிமனர்கள் ((Sugar Craft) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing) சமையற்கலை (Cookery), ஒப்பனைக்கலையும் தலை அலங்காரமும் (Make up and Hair Dressing) புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

7/B, நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

(33995)

A/L 95 DAY CLASSES
(பகல் நேர வகுப்புக்கள்)

கலை - வர்த்தக பிரிவுக்கு உரிய சகல பாடங்களும்

ஆரம்பம்: 27 - 09 - 94
செவ்வாய் காலை 8 மணி

புதிய உயர் கல்லூரி
(New College of High Studies)
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

(இ-9353)

யாழ். கொட்டடி சனசமூக நிலையம்

மாதாந்த கருத்தரங்கும் தியாகி திலீபன் நினைவு விழாவும்

இடம்: சிவன் பண்ணை வீதி, கொட்டடி
காலம்: 25 — 09 — 1994 ஞாயிறு மாலை 5-00

சிறப்பு நிகழ்வு:
சொற்பொழிவு திரு. M. குமாரவேல்
(பொருளியல் ஆசிரியர்)

பட்டிமன்றம்:
நாமிருக்கும் நாடு நமதென்பதை உணர்ந்து விட்டோமா?
நடுவர்: "செஞ்சொற் செல்வன்" இரா. செல்வவடிவேல் (விஞ்ஞான ஆசிரியர்)

எழுச்சிப் பாடல்கள்
பிரபல பாடகர்கள் கலந்து கொள்கிறார்கள்

தமிழீழ மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— நிர்வாகிகள்.

[33046]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

எட்டுச்சுரைக்காய்த் திட்டம்!

பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தும் விடயத்தில் நிலவுமுல்லுக்கு இடம்பெற்றுள்ளன.

1980 களில் முற்றாகியில் தேசிய பாடசாலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது நாட்டிலிருந்த தேசிய பாடசாலைகளில் எண்விகிதம் வெறும் பதினெட்டுத்தான்.

பாடசாலையின் தரம், தகுதி, வசதி மற்றும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, [தேசியப் பரீட்சைகளில் பெறுபேற்று வீதம், கட்டட, ஆய்வுகூட விடுதி, மைதான வசதிகள் போன்றவற்றைக் கணிப்பீடு செய்து அதன் அடிப்படையில் தேசிய பாடசாலை என்ற தரத்தை வழங்க அப்போது முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் காலப் போக்கில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல இந்தத் திட்டமும் அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகளின் குறுக்கீடுகள், தலையீடுகள் போன்றவற்றால் குழம்பி செல்திழந்து போய் உள்ளது.

நாட்டில் ஒரு சில சிறந்த பாடசாலைகளைத் தெரிவு செய்து அவற்றுக்கு கல அதிகாரம் வழங்கி, சுயமாக மிக்க நிறுவனங்களாக அவற்றை உருவாக்கவே இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

பாடசாலைகள் இடையே இவ்வாறு உயர்வு காட்டுவது சரியா என்பது குறித்து கல்விமான்கள் இடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. அது ஒருபுறமிருக்க, இத்திட்டம் கொண்டு வந்ததால் ஏற்பட்ட பயன்தான் என்ன?

அதிகாரிகள், அரசியல்வாதிகள் தாங்கள் விரும்பிய பாடசாலைகளை தேசியப் பாடசாலை என அறிவிக்கச் செய்ததுதான் மிச்சம்.

நடமாடும் ஜனாதிபதி செயலகம் ஒரு மாவட்டத்துக்கு இயங்கச் சென்றால் அவ்வேளை அந்த மாவட்டத்தில் உள்ள இரு பாடசாலைகளை — அவை வடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்யாதவையாக இருந்தாலும் கூட — தேசியப் பாடசாலைகளாக அறிவிப்பது; ஏதேனும் ஒரு பாடசாலையின் அதிபருக்கு அல்லது பழைய மாணவருக்கு அல்லது அப்பாடசாலையுடன் தொடர்புபட்ட ஒருவருக்கு கல்வி அமைச்சில் செல்வாக்கு இருந்தால் — நிரைமறைவில் வேலைகளைச் செய்து — அப்பாடசாலையை தேசியப் பாடசாலையாக்குவது — இப்படித்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

கடந்த பத்தாண்டு காலத் தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கையும் பத்துமடங்காக உயர்ந்திருந்தது இப்படித்தான்.

தேசியப் பரீட்சைகளில் 70வீத சித்திப் பெறுபேறாக் காட்டாத — 1800 மாணவர்களைக் கூட கொண்டிராத — ஆய்வுகூட வசதிகளற்ற — பாடசாலைகள் கூட தேசியப் பாடசாலைகளாக அறிவிக்கப் பட்டிருக்கின்றன.

தரமற்ற பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக்கப் பட்டிருப்பது ஒருபுறம்; மறுபுறத்தில் அவை சுயதனமாக இயங்கக் கூடியதாக — தேசிய பாடசாலைத் திட்டத்தில் கூறப்பட்டபடி — அவற்றுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றதா என்றால் அதுமில வேடிக்கையானது.

சாதாரண ஆசிரிய இடம் மாற்றம் முதல், பாடசாலை பகுதித் தலைவர், பிரதி அதிபர் நியமனம் வரை —

தன் கற்றாடல் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பாடசாலை இயங்கும் நேர்த்தை — ஒருவேளை அல்லது இரு வேளைப் பாடசாலையாக இயக்குவது — என்பது வரை —

ஒவ்வொரு விடயத்துக்கும் தனது பிரதேச கல்விப் பணிப்பாளரின் முடிவை எதிர்பார்த்து வைகறிடி நிற்க வேண்டிய — சாதாரண பாடசாலைகளின் அதிபர்களைப் போலவே — தேசியப் பாடசாலை அதிபர்கள்— இருப்பதையும் நாம் இன்று இங்கு பார்க்கிறோம்.

இவற்றைப் பார்க்கும்போது ஒரு விடயம் தெளிவாகுகின்றது. பல நல்ல நோக்கங்களுக்காக தேசியப் பாடசாலைத் திட்டம் கொண்டுவரப்பட்டாலும் அது செயலில் வெற்றியளிக்கவில்லை; வெறும் ஏட்டுச் சுரைக்காய்த் திட்டம் தான் அது.

சந்திரிகா 60 சத வீதத்துக்கும் அதிக வாக்குகளை தேர்தலில் பெற வேண்டும் என்பது அரசின் இலக்கு

புதிய நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்னும் ஆறு வாரங்களில் நடைபெறவுள்ளது. நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி இந்தத் தேர்தல் இடம்பெறப்போகிறது. பொதுத் தேர்தல் நடைபெற்ற மூன்று மாதங்களுக்குள் மற்றொரு தேர்தல் வருகிறது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும், எதிர்க்



சந்திரிகா

கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவும் மோதுகிறார்கள், ஜே. வி. பி. வேட்பாளராக சோமவன்ச அமரவன்சவும் மற்றும் கயேசுகளாக இருவர் அல்லது மூவரும் போட்டியிடலாம் என பேசப்படுகிறது. நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் ஏழாம் திகதி தாக்கல் செய்யப்பட்ட பின்னரே வேட்பாளர்களின் எண்ணிக்கை நிச்சயமாகத் தெரியும்.

பொதுத் தேர்தல் நடந்த குறுகிய காள இடைவெளியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கப்போவதால், சந்திரிகாவுக்கே வெற்றி வாய்ப்பு நிச்சயம் என்று பெரிதும் நம்பப்படுகிறது.

எவினும் தான் இத்தேர்தலில் வெல்றே திருவது என்ற உறுதியுடனேயே போட்டியிடுவதாக காமினி திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார். தேர்தலில் வென்று ஜனாதிபதியாக வந்தால், நிறைவேற்று ஜனாதிபதி முறையே தொடரும் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் இக்கிய முன்னணிக்குக் கொடுத்த ஆசனப் பலம் போதாது. அதனால் ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஆட்சியை விநிரப்படுத்த வேண்டும் என்பதற்காகவே, நிறைவேற்று ஜனாதிபதிக்கான தேர்தலை நடத்துவது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்தது. அதற்காக தேர்தல் இன்றியே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்ற முந்திய நிலைப்பாட்டையும் மாற்றிக் கொண்டது.

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா எப்படியும் அறுபது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும் என்பது அரச தரப்பினரின் இலக்கு. அதனை அடைவதற்கு ஏற்ற விதத்தில் மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டும். அதற்கேற்ற வகையில் அரசின் செயற்பாடுகளும், தேர்தல் பிரசார உத்திகளும் அமைய வேண்டும் என்று திட்டமிடப்படுகிறது.

60 சதவீத வாக்குகள் இலக்கு

ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கக் கட்சி வேட்பாளராக சந்திரிகாவுக்கு அறுபது சதவீத வாக்குகள் கிடைக்காமல் ஐம்பது வீதத்துக்குச் சற்று அதிகமாகக் கிடைக்கும் பட்சத்தில், நாடாளுமன்றத் தேர்தலை மீண்டும் நடத்த வேண்டும் என்பது ஆட்சியாளர்களின் எண்ணமாக உள்ளது. இதனை அவைச் சார் ஒருவரே (ரத்னசிறி விக்கிரமநாயக்கா) அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றி, சர்வதேச சட்டங்களின் ஆதரவைப் பெறுவதற்கு 60 சதவீத வாக்குகள் தேவை என்று அவர் விளக்கியுள்ளார்.

ஜனாதிபதியாக ஒருவர் தெரிவாகுவதற்கு தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளில் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமாகப் பெற வேண்டும். அந்தத் தேவையை சந்திரிகா பூர்த்தி செய்து விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அறுபது சதவீதத்துக்குக் கூடுதலாகப் பெற்று அரசின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அரசு விரும்புகிறதாம்.

ஜே. வி. பி. வேட்பாளர் ஒருவர் போட்டியிடும் பட்சத்தில், முற்போக்குவாத சிங்கள இளைஞர்களின் வாக்குகளில் ஒரு பகுதி சந்திரிகாவுக்கும் கிடைக்காமல் போகலாம். பொதுத் தேர்தலில் புதிய வாக்காளர்களாக வந்திருக்கும் இந்த இளைஞர்களின் ஆமோக ஆதரவு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே கிடைத்தமை. குறிப்பிடத்தக்கது. இந்த வாக்குகளையும் சேர்த்த பின்னரும் பொ. ச. ஐ முன்னணியால் 48 94 சதவீத வாக்குகளையே பொதுத் தேர்தலில் பெறமுடிந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி 44 04 வீதமான வாக்குகளைப் பெற்றது. அந்த வாக்குகள் ஆமோகமாக நிரந்தரமானவை மூன்று மாத காலத்தின் பின்னர் நடைபெறும் தேர்தலில் அந்த வாக்குகள் மக்கள் மாறும் என்று எதிர்பார்க்க முடியாது.

இளைஞர்கள் வாக்குகள் மீளவுபடும்

புதிய சிங்கள வாக்காளர்களான இளைஞர்களின் வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு பேருக்கு பகிரப்படும்போது அரசாங்கத் தரப்பின் மொத்த வாக்குகள் குறையவே செய்யும்!

இத்தகைய ஒரு பின்னணியில்—ஜே. வி. பி. வேட்பாளர் போட்டியிடும் பட்சத்தில்—வேறு ஒரு பக்கத்தில் இருந்து சந்திரிகாவுக்கு வாக்குகள் தேவைப்படும். இதனை மனதில் வைத்தே அவர்

அரசியல்

தொண்டமானின் ஆதரவைப் பெற முயற்சிக்கிறார்.

இ. தொ. காவின் மூன்று கட்சிகளுக்கும் மேற்பட்ட வாக்குகள் நிரட்சியாக வந்தால் பொதுத் தேர்தலைப் போன்றே ஆமோக வெற்றி பெறலாம் என்று பொ. ஐ. முன்னணி கருதுகிறது.

தொண்டாவின் வாக்குகள்

அதனாலேயே சந்திரசேரனையும், செல்லச்சாமியையும் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல், சந்திரிகா தொண்டமானின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிக்கிறார் சந்திரிகா!

தமது மக்களின் நலன்கருதி, அரசாங்கக் கட்சியை ஆதரிப்பதே பொருத்தம் என்றும், ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைத்தவம், பதவியில் இருந்த காலத்தில் மலையகத் தமிழர்களின் நலன்களை நிறைவேற்றுவதில் உதாசீனமாக நடந்ததாகவும் தொண்டமான் தெரிவிக்கிறார். இப்போதைய அரசாங்கப் பக்கத்துக்குச் சேருவதற்காகக் கூறும் காரணம் இது என்பது எவருக்குப் புரியும்.

ஐக்கிய தேசியக்கட்சி மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்று தெரிந்தும், பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சின்னத்திலேயே இ. தொ. கா. போட்டியிட்டது ஏன் என்ற கேள்விக்கு தொண்டமான் சரியான பதில் கூற முடியாது. ஐ. தே. க. வெல்லும் என்ற தனது சோதிடர் மதிப்பீட்டினை நம்பி, புறக்குழலை — பொ. ஐ. முன்னணி தான் பொதுத் தேர்தலில் வெல்லும் என்ற பின்புலத்தை — புறக்கணித்துச் செயற்பட்டார் என்பதே அதற்குச் சரியான பதிலும் விளக்கமுமாக அமையும்.

இப்போது தனது நிலைமை மோசமாகி விட்டது. சந்திரசேரனும், செல்லச்சாமியும் தன்னுடனேயே இருந்து வளர்ந்தவர்கள். அரசாங்கத்தரப்புடன் அவர்களை இணைந்திருக்க விடுது, நாம் கடுத்த பக்கத்தில் நின்றால், அவர்களை வீழ்த்துவது கஷ்டம்: தாமே அரசாங்கத் தரப்புக்குப் பாய்ந்து அதனை வைத்தே அவர்களை ஒரு கட்டு கட்டுவதே நிரந்தர வெற்றியாக இருக்கும் என்று எண்ணுகிறார் தொண்டமான்! அவ்வாறு செய்தாலே. இ. தொ. 'கவையும்' அதன் எதிர்காலத் தலைவராக தமது பேரன் ஆறுமுகம் தொண்டமானையும் காப்பாற்றி வளர்க்க முடியும் என்பது அவரது திட்டம்.

இடதுசாரிப் போக்குடைய முன்னாள் அமைச்சர் பி. பி. தேவராஜாக்கும் தொண்டமானுக்கும் இடையில் அடிப்படைக் கொள்கை வேறுபாடுகள் முரண்பாடுகள் உள்ளன. தேவராஜும் தன்னைப் பிரிந்து பொ. ஐ. முன்னணிக்குப் போகுமுன் தான் போய் விடுவது விவேகமானது என்றும் தொண்டமான் எண்ணுகிறார்.

தாவல் நாடகத்துக்கு இப்படியும் காரணம்

அதனால் திரு. தொண்டமான் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவையே ஆதரிப்பார் என்று மிகவும் பலமாக நம்பப்படுகிறது. சந்திரிகா இனப்பிரச்சினையை தீர்ப்பதில் உண்மையான அக்கறை காட்டுவதாலும் சந்திரிகாவை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தையும் அவர் தனது தாவல் நாடகத்துக்கு ஒரு காரணமாக முன் வைத்து வருகிறார்:

இதே வேளை—

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தாம் உறுதியாக இருக்கிறார் என்பதற்கு சந்திரிகா பல சான்றுகளை படிப்படியாக முன்வைத்து வருகிறார். பதவியைப் பொறுப்பேற்ற ஒரு சில நாள்களில் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தும் தமது விருப்பத்தை வெளியிட்டார். முந்திய அரசின் நிலைப்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டு விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நேசக்கரம் நீட்டினார்.

அதனைத் தொடர்ந்து அவர் உற்சாகமாகச் செயற்படுகிறார். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் தாமே நேரடியாக கடிதத் தொடர்பு வைத்து வருகிறார். இரு தரப்புகளிலும் நல்லெண்ணம் வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

சமாதானப் பேச்சு

இந்த நல்லெண்ணத்தின் விளைவாக ஆரம்பக் கட்டச் சமாதானப் பேசுவார்த்தைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இரு தரப்புகளிலும் தலா நான்கு பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுக்கள் நியமிக்கப்பட்டு பரஸ்பரம் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது ஆரம்பக்கட்ட சமாதானப் பேச்சுகள் ஆனைமாக எடுத்து மாதம் 18ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடையில் யாழ்பாணத்தில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பொருளாதாரத் தடைத் தளர்வு, மின்சாரம் வழங்கும் முடிவு, சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறிக்கின் எம்பவற்றைத் தொடர்ந்து வடக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி இப்பகுதி மக்களின் வாக்குகளைப்பெறுவது சந்திரிகாவின் மனவிருப்பமாக இருக்கும் என்று அவதானிக்க கருதுகின்றார்கள்.

வடபகுதி இப்போது விடுதலைப் புலிகளின் ஆட்சியில் உள்ளது. இங்கு தேர்தல் எதனையும் கொழும்பு அரசு நடத்துவதாக. அவர்களின் அனுமதியையும் அனுசரணையையும் பெற வேண்டும் என்கிறது யாதார்த்தமானது.

வடக்கு வாக்கு

இப்போதுள்ள சூழ்நிலையில், ஆமோக வெற்றி பெறுவதற்கு சந்திரிகாவுக்கு மனவலிமையானாலும் சரி, வடக்கு வாழ்மக்களும்சரி தமிழ் மக்களின் வாக்குக் தேவைப்படுகிறது. ஆனால் வடக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அவர் விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெறுவதே சரியானது என்ற கருத்து பரவலாக நிலவுகிறது.

வடக்கு - கிழக்கு இணைப்பு நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டு சுமுக நிலையை ஏற்படுத்திவிட்டு, வடக்கில் தேர்தலை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பிரதமர் கோரலாம் என்று கருதுவோரும் உள்ளனர். வடக்கில் அவரது கட்சி தனியாகவோ, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியுடனோ கூட்டு சேர்ந்தோ போட்டியிடலாம் என்றும் கருதப்படுகிறது.

காமினி ஜே. ஆர் வேடம் போடுவார்

இதற்கிடையில் காமினி திஸாநாயக்கா, தொண்டமானின் ஆதரவு தனக்கே கிடைக்கும் என்றும், தாம் தமிழர்களுக்கு எதிரானவர் அல்லர் என்றும் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளார். யாழ்பாணம் நாக் நிலையம் எரிக்கப்பட்டதற்கும் தனக்கும் எவ்வித தொடர்புப் இல்லை என்றும் அவர் மறுக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின்

காமினி திஸநாயக்கா

செயற்பாடுகளை சரி மக்களையும் அரவணைப்பதாக அமைக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் என்ன பாடுபட்டாலும் சரி, எத்தகைய பாட்டைப் பாடினாலும் சரி, தமிழர்களின் ஆதரவைப் பெறுவது முயற்கொம்பு என்பதுமிகவும் வெளிப்படையாகும். தமிழர்களின் ஆதரவின்றித் தேர்தலும் பட்சத்தில் காமினி ஒரு ஜே ஆராக மாறுவார் என்று அரசியல் விமர்சகர்கள் நம்புகிறார்கள்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகவிருப்பதை இலங்கை மக்கள் மட்டுமன்றி முழு உலக மக்களுமேமகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் வரவேற்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பெரிதும் கஷ்டமான காரியம். பல தடைகளைத் தாண்ட வேண்டியது.

பலரின் எதிர்ப்புகளைத் தேடிக் கொடுக்கக் கூடியது. தீர்வு ஒன்று எட்டப்படாமல் தடுப்பதற்குப் பல தீய சக்திகள் காத்துக் கொண்டிருக்கின்றன என்பது தெரிந்த விடயமே.

இத்தகைய நிலையில், தமிழர்களின் ஆதரவு தனக்குக் கிடைக்கவில்லை என்று கண்டதும் மேலே கூறிய தீயசக்திகளில் ஒன்றாகக் காமினியும் சேர்ந்து கொள்வார் என்று கருதப்படுகிறது.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா எவ்வாறு அது நடைமுறைக்கு வராமல் செய்தாரோ, அதனைவிட ஒரு வேடத்தைத் தாங்கி காமினி செயற்படுவார் என்று கூட விமர்சகர்கள் கருதுகிறார்கள்! எதற்கும் காலம் தான் பதில் சொல்லும்.

★

தியாகி திலீபன் போராட்டம் புதிய வரலாற்று அத்தியாயம்

> யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையும், யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சி கழகமும் நியாகி திலீபன் நினைவாக வெளியிட்ட "திலீபனின் தியாகம்" என்ற தலைப்பிலான அறிக்கை இங்கே தரப்படுகிறது.

உலகின் மனச்சாட்சியையும் எங்களின் தேசிய ஆன்மாவையும் உலுப்பிய திலீபனின் உன்னத தியாகத்தின் தரிசனத்தில் நாம் விழிப்பினைப் பெறுகின்ற காலம் இது. எங்களின் சுதந்திர வாழ்வினுக்காக, வாழும் வகையில் தன்னலம் மறுத்த திலீபனின் உன்னதத்தினை விளக்க எங்களிடம் வார்த்தைதான் இல்லை; அவனை அளக்க எங்களிடம் மாதிரிகளும் இல்லை.

தடைகள் தரப்படுத்தல்கள் என்ற இனவாத கொடுமைகளையெல்லாம் தாண்டி எங்கள் பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவனாகும் வாய்ப்பினைப் பெற்ற வீரத்திலன் திலீபன், தன் மருத்துவப் படிப்பினையே துறந்து தேச வைராக்கியனாக தேச விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவன் இன்று அவனது புனித உடல் மட்டுமன்றி, அவன் வாழ்ந்த வாழ்வின் சுவடுகள் அனைத்துமே எங்களுக்கான உன்னத பாடங்களாக.

"நாமுண்டு, நம்பாடுண்டு, அடிமை வாழ்விலும் அலாபம் கிடைத்தால் போதும்" எனக் குறுகிப் போகும் இந்த சமூகத்தை தரிசித்து, தேச மலர்ச்சியில் தான் எல்லோருக்கும் வாழ்வு என்பதனை உணர்த்தி நின்றவன் திலீபன். சுதந்திர தேவியின் தரிசனம் இல்லாத தேசத்தில்,

"காவிய நாயகன் ஞானகைகள் வேதங்கள் உலகோடோ?" என ஆன்றோரியின் உயிர்ப்புக்கு அர்த்தம் சொல்வதாய் எங்கள் திலீபனின் வாழ்க்கை அமைந்து விடுகிறது.

சுதந்திர வேட்கையை விதை கொடுத்து வாரிவிட்டவரும் தம் வல்லமையால் அடக்கி விடலாம் என இந்திய வல்லாதிக்க அரசும், இலங்கையின் இனவாத அரசும் கனவோத்து சதுரங்க நாடகம் ஆடிய வேளையில்தான் திலீபனின் வில்லரு தரிசனம் எழுந்தது.

காந்திமகானின் அஹிம்சையை தர்மசங்கரமதை மொழிறிப் பயன்கொண்டு, பேரழிப்பு நடத்தும் இந்தியா தன் வேஷம் கலைந்து நிர்வாணமாயிது. 13 நாள்கள் நீராகாரமும் அருந்தாமல் உலகப் போராட்ட வரலாற்றிலேயே புதியதோர் அத்தியாயத்தை எழுதிச் சென்ற திலீபனின் நடத்தியே இன்று ஆயிரமாய் எழுகின்றன. வீரர்களால் எமது வாழ்வு நாளைய விடிவின் நம்பிக்கைகளாக நிமிரும்.

சுதந்திரத்திற்கான தேச நிர்மாணத்திற்கான இந்தப் போரிலே அற்புதமான ஆர்ப்பணிப்பாகிய திலீபனின் நினைவுகள் எம் கருத்தான கடமைகளை உணர்த்தி நிற்பன.

எம் தேசத்திற்கான எங்கள் மக்களின் சுதந்திர வாழ்வுக்கான எமது பணிவுகளை அறிவுறுத்தி நிற்பன. வெறும் ஏட்டுக் கல்வியுடன் குறுகி விடும் பட்டத்துடன் தேசங்களையே மறந்தோடும். அவலங்களையெல்லாம் துறந்து திலீபனின் வாழ்க்கை சொல்லிய பாடங்களையும் எங்களின் ஆத்ம தரிசனமாக்குவோம்.

யார்க்கும் அடிமையில்லாத தமிழ்த் தேசத்தின் விடிவுக்காய் உறுதியும், கட்டுப்பாடும் மிக்க உன்னத நலைமையின் கீழ் கடமைகளை நிறைவேற்றுவோம். மக்கள் புரட்சிக்கான சித்தனை அவனைவை தேசமெங்கணும் உயிர்ப்புடன் எழுப்புவோம்.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும்."— திலீபன்.

★

நல்லூர்க் கந்தன் வீதியிலே ஒரு கதாநாயகன்

நல்லூர்க் கந்தன் வீதியிலே
நாயகன் ஒருவன் சிறையிருந்தான்
அகிலம் உறுபவர் துயர்களைய
ஐம்புலன் அடக்கித் தவமிருந்தான்

உரிமை வாக்கைக் குரல்கொடுக்க
உத்தமன் ஒருவன் உயிர் கொடுக்க
மரமாய் அங்கு அமர்ந்திருந்தான்
மனங்கள் நெகிழப் பார்த்திருந்தான்

தலைவன் உணர்வின் செல்வீரன்
தமிழர் வாழ்வின் அடிநாதம்
மலையாய் நகர்ந்த படையதிர்ந்து
மலைத்திட அகிம்சைப் போர்தொடுத்தான்

புரட்சித் தீயின் கொடுந்தணலில்
உடலை உருக்கித் துரும்பாக்கி
சுதந்தர திலீபன்; பாரதத்தின்
முகத்தைத் திரையைக் கிழித்தெறிந்தான்.

— மாரீசன்பிள்ளை,

உரிமைக்கு உயிர்தந்த சத்தியனே! திலீபா!

ராகம்: ஸ்ரீரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

உரிமைக்குக் குரல்தந்த உத்தமனே - தமிழர்
உரிமைக்கு உயிர்தந்த சத்தியனே - திலீபா!
(உரி.....)

அனுபல்லவி

பெருமைக்குப் பெயர்சேர்க்க வரலெழுந்த - இனப்
பெருமையின் பொருள்காக்க உதித்தவனே - அன்று
(உரி.....)

சரணம்

கோட்டையெம் நுயரத்தின் சின்னமென்றாய்-புலிக்
கொடியறந்தா லெமக்கு விடியலென்றாய் - யாழ்
கோட்டையெம் கைவந்தால் முடியுமென்றாய்-தமிழ்க்
கொடியறந்தா லீழம் வருமென்றாய் - எங்கள்
(உரி.....)

— முருகு.

தேசியகவி
உதயன் வாரிய சுவரொட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 ஆவது
பிறந்த நாள் வாழ்த்து

லோண்டனில் மெல்பேர்ன். செப். செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த

செல்வி மதனா செல்லக்குட்டி
அவர்கள்

தமது 21 ஆண்டு பிறந்த தினத்தை 25 - 09 - 94 இன்று மாலை நான்கு மணிக்கு தமது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை இதயம், அன்னையார், அத்தான்மார், மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், மச்சான்மார் மற்றும் பெறாமக்கள், சகோதரிகள் யாவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(33061)

முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொண்ட (வாடகைக்கு பெற்றுச்சென்ற) வீடியோ நாடாக்களை 10 - 09 - 1994 இற்கு முன்பாகச் செலுத்தாதவர்கள் எம்மிடம் ஒப்படைக்கவும். தவறும் பட்சத்தில் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி

ரெலி வோஜில்
வீடியோ கொர்பொரேஷன்,
K.K.S. வீதி,
சுன்னாகம்.

(7657)

மரண அறிவித்தல்கள்

நல்லதம்பி அமிர்தலிங்கம்

[முன்னாள் மாணவர், V. மாணிக்கம்ஸ் - கொழும்பு]

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி அமிர்தலிங்கம் 20. 09. 94 அன்று கொழும்பில் காலமானார். இவர் நல்லதம்பி தம்பதியின் மகனும் சதாசிவம் (சிவிமர்) தம்பதியின் மருமகனும், அருள்ராணியின் அன்புக் கணவரும், சஞ்சீவின் அருமைத் தந்தையும், சிறோமியின் அன்பு மாமனாரும், காலம் சென்ற செல்லம்மா, நடராசா, காலஞ்சென்ற சண்முகவிநாயகம், இராசநாயகி, கிருபரெட்ணம் (ஓய்வு பெற்ற நாதியர் பயாகர் - யாழ். போதனா வைத்தியசாலை), நல்லம் ஆகியோரின் சகோதரரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று 25.09.94 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு எரிதகன மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. விஜயரெட்ணம்
(மனைவி)
(சகோதரர்)

86, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(33062)

குலசேகரம்பிள்ளை செல்லம்மா (சிறி)

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குலசேகரம்பிள்ளை செல்லம்மா (சிறி) காலமானார்.

இவர் குலசேகரம்பிள்ளையின் (குகம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகநாதி (ஓடலி) - செல்லமுத்தரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பையா, முத்தம்மாவின் அன்பு மருமகளும், கோகிலராணி, மனோன்மணி (நோர்வே), ஜெயராணி, கருணாதன், ஜெயதாசன் (புளொட் - ம. விந்தியாவையம்), குகநாதன், மனியன் (கொக்குவில் நாமகள் சித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தாயாரும். இளங்கீரன், கேதீஸ்வரன் [கண்ணன் நோர்வே], ஆகியோரின் அன்புமாமியும், புதர்ஷா, கஷ்யாவினி, அஜந்தன், தர்சினா, கபிலேந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்புப்பேரத்தியும், பேரன்மார் (அன்னத்தர்), கமலாசனி, சரஸ்வதி, சந்திரமதி காலஞ்சென்றவர்களான [இருஷ்ணன் (ரவி) கோணேஸ்வரன் மற்றும் நாகேஸ்வரன், விக்கினேஸ்வரன் [கனடா] ஆகியோரின் அன்புச்சகோதரியும், கப்பிரமணியம், சிவானந்தன், பரராசசிங்கம், தெட்சணாமூர்த்தி, புஸ்பாஞ்சலி, இராசேஸ்வரி, மகேஸ்வரி, கபாஷினி (கனடா) கணேசன் (நவரட்ணம் ஈஸ்வரி எலெக்ரோனிக் சென்டர் கோண்டாவில்), மகேஸ்வரி, காலஞ்சென்றவடிவேல், நாகேசு, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புமைத்துனியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (25 - 9 - 1994) ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தே. இளங்கீரன்
[மகுமகன்]

43 சிங்கள வீதி,
கலைவாணி மிக அருகில்,
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

[33056]

திருமதி செல்லம்மா தம்பிப்பிள்ளை
அல்லைப்பிட்டி

அல்லைப்பிட்டி 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது நரவற்குழியில் வசித்து வந்தவருமான திருமதி செல்லம்மா தம்பிப்பிள்ளை நேற்றுக் காலமானார்.

காலஞ்சென்ற இளந் தம்பிப்பிள்ளையின் மனைவியும், கப்பிரமணியம், நடராசா, சந்திரசேகரம், மகேந்திரராசா, செல்வலக்ஷ்மி, ரதலக்ஷ்மி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, சந்திராவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், குணபாலன், குணசிங்கம், மார்க்கண்டு மகேந்திரராசா, செல்வகுமார் (அம்புலி இளிப்பகம், நரவற்குழி), புஸ்பம், தவமணி, சந்திரலோசினி, லெனி - சந்திரசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் சமகிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 25 9-94 பி.ப. நரவற்குழியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
த. மகேந்திரராசா
[மகன்]

[33063]

காமினியின் அரசியல் எதிர்காலம் ஜனாதிபதித் தேர்தல் முடிவில்

கொழும்பு, செப். 25

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சவிசமான வாக்குகளைப் பெற்றாலன்றி காமினி திசநாயக்காவின் அரசியல் எதிர்காலம் பெருமளவு பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது"

'ராவய' பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐயன் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்ட முடியாவிடினும் ஆகக் குறைந்தது பொதுத் தேர்தலில் ஐ.தே.க. வுக்குக் கிடைத்த வாக்குகளை

நிரந்தர நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், செப். 25

பட்டதாரிச் சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாகிய நிரந்தர நியமனக் கடிதங்கள் எதிர்வரும் புரட்டாதி மாதம் 2.00 மணிக்கு நல்லூர் கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும் என்று நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

அறிவியலரங்கு

தென்மராட்சி, செப். 25

சாவகச்சேரி பிரதேச சபை மிதுசவிக் பொது நூலகமும் ஆபிவிருத்தி சபையினர் நடத்தும் மாதந்தோறும் அறிவியலரங்கு இன்று ஞாயிறு பி.ப. 3.00 மணிக்கு உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் சபைத் தலைவர் திரு. மு. கதிரவேலுந்தம் தலைமையில் நடைபெறும்.

"உயர் இரத்த அழுத்தம்" என்னும் பொருளில் வைத்திய கலாநிதி T. பிரிவு ஜெயகுமாரசா உரையாற்றுவார். (ஒ-117)

கைத்டியில் நாய்களுக்கு விசர் தடுப்பூசி

தென்மராட்சி, செப். 25

கைதடி கலைவாணி சன சமூக நிலையத்திலும் பாரதி சன சமூக நிலையத்திலும் நாளை திங்கட்கிழமை நாய்களுக்கு விசர் தடுப்பூசி போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)

ராவய ஆசிரியர் கூறுகிறார்

வின் எண்ணிக்கைக்கு குறையாத வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கே காமினி திசநாயக்கா முயற்றுவருகிறார். தொண்டமானின் முடிவே

பாலர் ஆசிரியர் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப் 25

சண்டிலிப்பாய் பிரதேச பாலர்-பாடசாலை ஆசிரியர் பயிற்சியின் இன்று மாலைப்பாய் கெமோறியன் ஆங்கிலப் பாடசாலையிலும்—

உடுவில் பிரதேசப் பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சியின் ஒக்டோபர் 1ஆம், 2ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (த)

கொலை வழக்கு: தப்பியோடிய சிப்பாய்கைது

கொழும்பு, செப். 25

முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் காமினி லொக்குகேயின் வீட்டில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கொலீஸ் ஸ்ரான் ஸ்டபிளைச் சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக—

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய தனியார் ஒருவரைக் கம்பளைப் பொலிஸார் கைது செய்து நீர்கொழும்புவைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (ஒ-எ-6)

விடைத்தாள் பரிட்சகர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப். 24

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சி.ஈ. (சாதாரண) தரப்பரீட்சையில் விடைத்தாள் பரீட்சகராகப் பணியாற்ற விரும்புவர்கள் தமது விண்ணப்பத்தை தங்கள் கோட்டப் பிரதிக்கல்வி அலுவலகத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-3)

லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஆணைக்குழு நியமிப்பதற்கு நாடாளுமன்றில் சட்டமூலம்

கொழும்பு, செப். 24

லஞ்சம், ஊழல் தொடர்பான குற்றச் சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் அமைச்சர் பேரசிரியர் ஜி. எல். பீரிஸினால் சமர்ப்பிக்கப்பட்டது.

நிரந்தர லஞ்ச ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கும்—

1975 ஆம் ஆண்டின் லஞ்சம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகளை வெளியிடும் சட்டத்தின் மேலும் குற்றச் செயல்கள் குறித்து வழக்குத் தொடருமாறு பணிப்புரை விடுப்பதற்கும் இச் சட்டமூலம் வழிசெய்கின்றது.

சுகாதார சீர்கேடு காரணமாக இரு தேநீர் கடைகளுக்கு சாவகச்சேரியில் 'சீல்' வைப்பு

தென்மராட்சி, செப். 25

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள இரு தேநீர்கடைகள் சுகாதாரப் பகுதியினரால் கடந்த 21 ஆம் திகதி 'சீல்' வைத்து மூடப்பட்டன.

சுகாதார சீர்கேடு காரணமாகவே குறித்த இரு தேநீர் கடைகளும் 'சீல்' வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு கடைகளினதும் உரிமையாளர்களுக்கு ஏற்கனவே பல முறை சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தபோதும் உரிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளாததால்தான் கடைகளை மூடி 'சீல்' வைக்க நேர்ந்ததாக நகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர் திரு. நிவின்ரஸ் தெரிவித்தார் (ஐ-எ-117)

விளையாட்டு அபிவிருத்திக் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக நாளை திங்கட்கிழமை நடைபெறும் இறுதி நாள் உண்ணாவிரத நிகழ்வுகளில் சகல விளையாட்டுக் கழகங்களினதும் உறுப்பினர்களையும் அவர்கள் பொட்டங்களில் சென்று கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட இ.வி.கூ. சங்கம் சமாசம் கேட்டுக்கொள்கிறது. (த)

படையினர் வருவேற்பர்

கொழும்பு, செப். 25

சமாதானத்தை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கைகளையும் படையினர் வரவேற்பர். காரணம் யுத்தத்தில் வேதனையை அறிந்தவர்கள் படையினரே.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் மெனுகு குணதிலக முக்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தினர் யுத்த நிறுத்தத்தை விரும்புகின்றனரா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தினர் உண்மை சமாதானத்தையே விரும்புவர் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடக்கவிருக்கும் பேச்சுகளின் பிரதான பங்கை இராணுவம் வகிக்காது என்றும் அவர் சொன்னார். [இ-எ]

ஆவணம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருட்களுக்குப் பதிலாக பணம் வழங்கப்படும்..

★ பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் — அகதிகளுக்கும் பிரிவினருக்கும் —வழங்கப்பட வேண்டிய சகல நஷ்டஈடுகளையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு கொடுப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

★ எனவே பாதிக்கப்பட்டோர் தமது விபரங்களை தத்தமது பிரதேச செயலர்கள் மூலம் அமைச்சுக்குத் துரிதமாக அனுப்பி வைக்க வேண்டும்.

முடியுமானால் விபரத்தின் பிரதியை நேரடியாக அமைச்சுக்கு அனுப்புவதன் மூலம் துரிதப்படுத்தலாம்.

[illegible] பெற்றுக் கொள்ள [illegible] முடியும். [உ-4]

ஐ.தொ.கா தனித்து செயற்பட ஐக்கிய தேசிய கட்சி அனுமதி

சபாநாயகருக்கு கடிதம்

கொழும்பு, செப். 25

நாடாளுமன்றத்தில் திரு. தொண்டமான் தலைமையான இ. தொ. காவினர் தனித்துச் செயற்பட அனுமதிக்கும் கடிதம் ஒன்றை ஐ.தே.க. செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர சபாநாயகருக்கு அனுப்பியுள்ளார் என நம்பகவட்டங்கள் வெளியாகியுள்ளது.

நடந்த பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், இ. தொ. காவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரதி ஒன்றையும் விஜேசேகர அந்தக் கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளதாகவும் தெரிவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசநாயக்காவின் ஆலோசனைக்கு இணங்வே விஜேசேகர இக்கடிதத்தை அனுப்பியுள்ளார் எனத் தெரிவருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [இ]

பாடசாலையில்

தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் "மதிஒளி" கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் இன்று (ஞாயிறு) பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருதில் குண்டுகள் வெடிப்பு

கொழும்பு, செப். 25

கல்முனை சாய்ந்தமருது பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. இதனால் வர்த்தக நிலையம் ஒன்றும், வீடு ஒன்றின் ஜன்னல்களும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பகிஷ்கரிப்பு காரணமாகவே இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வீரவன்னிக்கு பிணை மறுத்த மேல் நீதிமன்ற தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீடு

கொழும்பு, செப். 25

பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னியை பிணையில் விடக் கோரிக்கை செய்யப்பட்ட மனுவை பதவை மேல் நீதிமன்றம் நிராகரித்திருப்பதை ஆட்சேபித்து கொழும்பு அப்பீல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கறியலில் வைக்கப்பட்டிருக்கும் பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னியை பிணையில் விடுவிக்கக் கோரி அமைச்சரின் மனைவியின் சார்பில் பிணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதும் —

அந்த மனுவை பதவை மேல் நீதிமன்றம் கடந்த வாரம் நிராகரித்ததும் தெரிந்ததுமே.

இதனை ஆட்சேபித்தே நேற்று முன்தினம் கொழும்பு அப்பீல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. [உ-6]

உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொள்ள அழைப்பு

தியாகி லெப். கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளான நாளை திங்கட்கிழமை கோட்டரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகளை சிறப்பாகவும் எழுச்சியாகவும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் —

காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வில் சகல தரப்பினர்களும், கட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் ஊழியர்களை வைத்து கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

காலை வேளை உள்ள நிரவலங்கள் தமது வாகனங்களை பொக்குவரத்துக்காக பயன்படுத்தும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-ஐ]

பேக்கரி உரிமையாளர் அரசுக்கு நிபந்தனை

கொழும்பு, செப் 25

450 கிராம் பாணை 3 ரூபா 50 சதத்திற்கு விற்பதற்கு பேக்கரி உரிமையாளர்கள் அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

★ மாவின் விலை ஒரு கிலோவுக்கு மேலும் 1 ரூபா 50 சதத்தினால் குறைக்கப்பட வேண்டும்.

★ 5 சத பாதுகாப்பு வரி உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

★ பாண் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும்.

இந்நிபந்தனைகளை நிறைவேற்றினால் 3 ரூபா 50 சதத்திற்கு பாண் விற்பனை செய்யப்பட முடியும் என்று பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-எ-6)

VACANCY

A well Established Organisation Requires the Services of Secretary - Either Sex - with 2 Years Minimum Experience to Work for the Managing Director.

Salary Negotiable

Applications Containing full Details with two Names and Addresses of two Non - Related Referees Should be Addressed to

Advertiser
C/O UTHAYAN,
292/2, Navalar Road,
Jaffna.

Closing Date:
3 RD OCTOBER. 1994.

[C-9229]

இப்பத்திரிகை நியூ கதிரன் அச்சகம் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் அச்சிடப்பட்டு 25 - 09 - 1994 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org